தமிழரசு

Tamilarasu

(Monthly)

நவம்பர் 2025 (November 2025)
விலை ரூ.30/- (Price Rs.30/-)

தமிழ்நாடு அரசு
செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 56
இதழ் (Issue) : 5

தென்காசி மாவட்டம்
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழா
மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

1,00,000 ஆவது பயனாளிக்கு
"கலைஞரின் கனவு இல்லம்"
திட்டத்தில் வீடு...

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
30.10.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில்,
முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118 ஆவது பிறந்த நாள் மற்றும்
குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின்
சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்
திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து
மரியாதை செலுத்தினார்.

THE CHIEF MINISTER'S TROPHY 2025

களம் நமதே!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.10.2025 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன்கொண்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார். உடன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)

கலைமாமணி விருது வழங்கும் விழா (2021, 2022, 2023)

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.10.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் நிகழ்வில், திரைப்பட நடிகர் திரு.விக்ரம் பிரபு அவர்களுக்கு கலைமாமணி விருது மற்றும் விருதிற்கான 3 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் விருது பட்டயத்தையும் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department, Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009
and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம்: ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 2025

மலர் : 56 விலை ரூ.30 இதழ் : 5

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
எஸ். உதயா கதிரவன்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
மு. மணிமேகலை

உதவி ஆசிரியர்
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டிஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். (குறள்: 457)

மனத்தின் நலம் உயிருக்கு ஆக்கமாக விளங்கும். இனத்தின் நலமோ எல்லாப் புகழையும் வழங்கும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாடு முழுவதும் 12,480 ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டம்.....4

★ தென்காசி மாவட்டத்தில் ரூ.587.39 கோடி செலவில் 2,44,469 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்.....10

★ மக்களின் உயிரே முக்கியம், மக்களின் உயிர் விலைமதிப்பற்றது.....18

★ முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2025 நிறைவு விழா, முதல் மூன்று இடங்களைப் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கோப்பைகள்.....26

★ "உலகப் புத்தொழில் மாநாடு 2025" புத்தொழில் சூழலை வலுப்படுத்த ரூ.100 கோடியில் "இணை உருவாக்க நிதியம்" திட்டம்.....38

★ 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் விழா.....43

★ வடகிழக்குப் பருவமழை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள்.....54

★ "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" வழங்கப்படும்.....64

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பயிற்சி வினா-விடைத்தாள்.....74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.10.2025 அன்று தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு.சுமதி அவர்களிடம் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் 12,480 ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலி வாயிலாகக் கலந்து கொண்டார் - 11.10.2025

கிராமப்புற மக்கள் தங்களின் உரிமைகளை அறிந்திடவும், தங்களின் தேவைகளைக் கோரி பெறுவதற்காகவும், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாட்டில் ஆறுமுறை கிராமசபைக் கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும், சில நேரங்களில் சிறப்பு கிராமசபைக் கூட்டங்களும் நடத்தப்படும். அதன்படி, ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 மற்றும் நவம்பர் 1 ஆகிய தேதிகளில் கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் ஊரக உள்ளாட்சிகளில் மிக முக்கிய ஜனநாயக நிகழ்வாகக் கருதப்படும் கிராம சபைக் கூட்டங்கள், மாநிலம் முழுவதும் உள்ள 12,480 ஊராட்சிகளில் 11.10.2025 அன்று காலை 11.00 மணியளவில் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி (Video Conference) வாயிலாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில், கிராம சபைகள் மக்களாட்சியின் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என வலியுறுத்தி, மக்களின் தேவைகள், சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை முன்னிறுத்தி ஊரக வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், செங்கல்பட்டு மாவட்டம் – கோவளம் ஊராட்சி, தென்காசி மாவட்டம் – முள்ளிக்குளம் ஊராட்சி, ஆகிய ஊராட்சிகளைச் சார்ந்த ஊராட்சி மன்றத்தலைவர்களும், கோயம்புத்தூர் மாவட்டம் – வாரப்பட்டி ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம் – கொண்டாங்கி ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் – திருமலைச் சமுத்திரம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடினர்.

இக்கூட்டங்களில், மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான மூன்று அத்தியாவசியத் தேவைகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டன. மேலும், சமூக நல்லிணக்கத்தைக் கருத்தில் கொண்டு, இழிவுபடுத்தும் பொருள் தரும் சாதிப்பெயர்கள் கொண்ட குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், பிற பொது இடங்களில் காணப்படும் பெயர்களை நீக்கி, புதிய பொருத்தமான பெயர்களைச் சூட்டுதல் குறித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'தாயுமானவர் திட்டம்' கீழ் பயனாளிகளை அடையாளம் கண்டு, நலிவு நிலை குறைப்புத் திட்டம் தயாரித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் இக்கிராமச் சபைக் கூட்டத்தில்,

"நம்ம ஊரு, நம்ம அரசு" என்ற தலைப்பின் கீழ் கண்டறியப்பட்ட திட்டங்கள் தேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து,

கிராம ஊராட்சிகளில் 01.04.2025 முதல் 30.09.2025 முடியவுள்ள காலத்திற்கு நிருவாகம், பொது நிதிச்செலவினம்,

கிராம ஊராட்சியின் 2024-2025ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் வரவு, பணி முன்னேற்றம்,

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம்,

தூய்மை பாரத இயக்க (ஊரகம்) (SBM (G) 2.0) திட்டம்,

ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்,

கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும்,

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாகவும்,

அனைத்து வகையான தொழில்களில் குழந்தைகளும் (Child Labour), அபாயகரமான தொழில்களில் வளரிளம் பருவத்தினரும் இல்லை என்பது குறித்து நடவடிக்கைகள்,

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் (DDU-GKY - RSETI Training) (கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சித் திட்டம்) குறித்தும்,

தேர்வு செய்யப்பட்டுள்ள 7,515 கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபை குறித்த வீடியோ / ஆடியோ பதிவுகளை சபாசார் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது,

2025-2026ஆம் ஆண்டின் பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா (PMAGY) திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளில் கிராம வளர்ச்சித் திட்டம் தயார் செய்து பணிகளை மேற்கொள்ள கிராம சபையின் ஒப்புதல்

உள்ளிட்ட மொத்தம் 16 முக்கிய தீர்மானங்கள் கிராம சபைகளில் நிறைவேற்றப்பட்டன.

மாநிலம் முழுவதும் நடைபெற்ற இக்கிராம சபைக் கூட்டங்கள், மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும், ஊரக வளர்ச்சியை வலுப்படுத்தும் சிறப்புமிக்க நிகழ்வுகளாக அமைந்தன.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக இருப்பது, கிராமங்கள்தான்! அதனால்தான், நம்முடைய தேசத்தந்தை காந்தி அவர்கள், "விடுதலை இந்தியாவின் வலிமை கிராமங்களில்தான் இருக்கிறது" என்று சொன்னதோடு, "இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது" என்று ஆணித்தரமாகச் சொன்னார்.

அப்படிப்பட்ட கிராமங்களை முன்னேற்ற வேண்டும் – கிராமப் பொருளாதாரத்தை வலிமையாக்க வேண்டும் – கிராம நிருவாகங்கள் வலிமையாக இருக்க வேண்டும் என்று ஜனநாயகப்பூர்வமாக சிந்தித்து, நாம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

இந்தத் திட்டங்கள்தான் தமிழ்நாட்டின் கிராம ஊராட்சிகளின் மேம்பாட்டுக்கு அடிப்படை! அதனால்தான், நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தொடர்ந்து கிராம சபைக் கூட்டங்களில் பங்கெடுத்தேன்.

உங்கள் ஆதரவோடு முதலமைச்சரான பிறகு, இப்போது மூன்றாவது முறையாக கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்கிறேன்.

இன்னும் பெருமையோடு சொல்கிறேன்... வேறெந்த முதலமைச்சரும் இப்படிக் கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றதில்லை! அதிலும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய அளவில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகளையும் இணையவசதி மூலமாக இணைத்து, கிராம சபைக் கூட்டத்தை நடத்துவது இதுதான் முதல்முறை!

இதைச் சாத்தியப்படுத்திய மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் அதிகாரிகளுக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அதேபோல, நம்முடைய ஜனநாயக அமைப்பின் அடித்தளமான கிராமங்களை உயர்த்த பணியாற்றிவரும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறையின் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. பொன்னையா, இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

என்றைக்கும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றும் இந்த எண்ணத்தை நமக்குள் விதைத்தவர், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள்! அவர்தான், "மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்" என்று நமக்குக் கட்டளையிட்டு, நம்மையெல்லாம் ஆளாக்கியவர்!

பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் போன்ற உயர்ந்த இலட்சியங்களை செயல்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகளை வழி நடத்தினார்.

தலைவர் கலைஞரின் வழித்தடத்தில்தான், நம்முடைய திராவிட மாடல் அரசும் பல்வேறு முன்னெடுப்புகளைச் செயல்படுத்தி, சமத்துவம், சமதர்மம், சமூகநீதியை நிலைநாட்டி வருகிறது.

நாட்டிற்கே வழிகாட்டுகின்ற மாதிரியான ஏராளமான திட்டங்களை, நீங்கள் உருவாக்கிய நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியிருக்கிறது!

கிராமப்புற பொருளாதாரத்தையும், பெண்களின் முன்னேற்றத்தையும் சாத்தியப்படுத்திய மாபெரும் திட்டம், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் திட்டம்!

உங்களில் நிறைய பேர் சுய உதவிக் குழுக்களால் பயனடைந்திருப்பார்கள். துணை முதலமைச்சராக இருந்தபோது, நானே பல மணிநேரம் மேடைகளில் நின்று சுழல்நிதி வழங்கியிருக்கிறேன்.

இதன் அடுத்தக்கட்ட பாய்ச்சலாகத்தான், மகளிர் உரிமைத் தொகை வழங்குகிறோம்! நீங்கள் எல்லோரும் கட்டணமில்லாமல் பேருந்தில் செல்கிறீர்களே, அந்த விடியல் பயணத் திட்டம் பெண்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு பெரிய பங்களிப்பைச் செலுத்துகிறது என்று எண்ணிப் பாருங்கள்...

நீங்கள் காலையில், சீக்கிரம் வேலைக்குப் போகவேண்டும் என்று அவசர அவசரமாகக் கிளம்புவீர்கள்.. அதற்கு நடுவில் சமையல் செய்யவேண்டும்.. ஆனால், அந்த சுமையைக் குறைக்க – அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற நம்முடைய குழந்தைகளுக்கு சத்தாகவும் – சுவையாகவும் காலை உணவு வழங்குகிறோம்!

நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் காலேஜ் முடித்துவிட்டு வேலைக்குப் செல்வதற்குத் தயாராக இருக்கின்ற அளவுக்கு – நான் முதல்வன் திட்டத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகிறோம்!

நம்முடைய பிள்ளைகள் படித்து முன்னேறி வரவேண்டும் என்று புதுமைப்பெண் – தமிழ்ப்புதல்வன் போன்ற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இப்படி, ஒவ்வொரு துறையிலும், பல திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது!

இவையெல்லாம் முத்திரைத் திட்டங்கள்! இதேபோல, கிராம வளர்ச்சிக்கு என்று பல திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்! கிராம மக்கள் தங்களுடைய ஊராட்சி நிருவாகத்தில் பங்கேற்கவும், வளர்ச்சிப் பாதையில், கிராம ஊராட்சியைக் கொண்டு செல்லவும், உரிய உரிமைகளை அளிக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் நோக்கம்!

அதற்காக, ஆண்டுதோறும் ஆறு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்தக் கிராமசபைக் கூட்டங்கள்தான், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை உணர வைக்கின்ற முக்கிய தருணம்!

நம்முடைய கிராமங்களின் தற்போதைய தேவைகள், வளர்ச்சி இலக்குகள், நலன்கள் குறித்து நேரடியாக விவாதித்து, தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற ஒரு விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும்.

நம்முடைய திராவிட மாடல் அரசு - சமூகநீதி, சமத்துவத்தை நிலைநாட்ட, சுயமரியாதை அடிப்படையிலான சமூகத்தை உருவாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாகத்தான், குடியிருப்புகள், சாலைகள், தெருக்களில் இழிவான தன்மையோடு சாதிப் பெயர்கள் இருந்தால், அதை மாற்றி பொதுப் பெயர்களைச் சூட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், 'நம்ம ஊர், நம்ம அரசு' என்ற பெயரில், கிராம சபையில் மக்கள் கலந்தாலோசித்து, 3 முக்கிய தேவைகளைத் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அப்படிக் கண்டறியப்படும் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுவதை மாவட்ட நிருவாகம் உறுதி செய்யவேண்டும்.

குடிசையில்லாத் தமிழ்நாடு என்ற இலக்கை எட்டிவிடும் வகையில், 'கலைஞரின் கனவு இல்லம்' என்ற புரட்சிகரத் திட்டம் துவங்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில், ஏழாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு முடிவெடுத்து, 2024-2025-இல் இதுவரை, 99 ஆயிரத்து 453 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

2025-2026இல், இன்றைய நிலையில், 78 ஆயிரத்து 312 வீடுகள் கூரை மட்டம் நிலைக்கு மேல் முன்னேற்றத்தில் இருக்கிறது.

அதேபோல, சாலை வசதிகளைப் பொறுத்தவரைக்கும், 2022-2023ஆம் ஆண்டில் அறிமுகமான முதல்வரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத்திட்டம் – நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி – உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் – 21 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான சாலைகள், பாலங்களை மேம்படுத்தியிருக்கிறோம்!

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முக்கிய முயற்சியாக, சாலை, குடிநீர், பள்ளிக்கூடங்கள், நூலக வசதிகள் போன்ற சேவைகள் விரிவாக்கப்படுகின்றன.

தாயுமானவர் திட்டத்தில், பெண்கள், குழந்தைகளின் நலனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன!

இவ்வளவு திட்டங்களையும், முன்னெடுப்புகளையும் நம்முடைய அரசு செய்து கொண்டு வந்தாலும், குடிமக்களாக ஒவ்வொரு தனிநபருக்கும் பல பொறுப்புகள் இருக்கின்றன! அதையெல்லாம் நாம் சரியாகச் செய்து, நாம் தான் நம்முடைய கிராமத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகவேண்டும்! உங்கள் முதலமைச்சராக, உங்களில் ஒருவனாக அதற்காகச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்...

ஒவ்வொரு வீட்டிலும், குழந்தைகள் படிப்பதை நாம் எல்லோரும் உறுதி செய்யவேண்டும்! எங்கேயாவது – யாராவது – குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தினால், உடனே மாவட்ட நிருவாகத்துக்குத் தகவல் கொடுத்து, அவர்களை மீட்கவேண்டும்!

இதை, கிராம ஊராட்சிகள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் என்று எல்லோரும் பொறுப்புடன் கண்காணிக்க வேண்டும்.

அடுத்து, கிராம மேம்பாட்டுக்கு முக்கியமான திட்டமான, நூறு நாள் வேலைத் திட்டம்! இந்தத் திட்டம் முறையாகச் செயல்பட்டு வருவதைக் கண்டிப்பாக உறுதி செய்யவேண்டும்! இந்தத் திட்டத்தில், வரவு செலவு எவ்வளவு? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது? என்று அனைத்துத் தகவல்களும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு தனிமனிதருக்கும், சமூகப் பொறுப்பு இருக்கவேண்டும்! நம்முடைய வீடு குப்பைக் கூளமாக இருந்தால், சும்மாவா இருப்போம்? நம் எல்லோருடைய வீடும் சேர்ந்ததுதான் நம்முடைய கிராமம்... அதைச் சுத்தமாக வைத்துக் கொள்கின்ற பொறுப்பு நமக்குத்தான் இருக்கிறது! முடிந்த அளவுக்கு பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும்... குப்பைகள் – ஊராட்சிகளில் வருகின்ற பேட்டரி வண்டிகளில், மக்கும் குப்பை – மக்காத குப்பை என்று தனித்தனியாகப் பிரித்துப் போடவேண்டும். கண்ட இடத்தில் குப்பை போடுவதைத் தவிர்க்க வேண்டும்!

ஊராட்சி நிருவாகங்களைச் சேர்ந்தவர்கள் குப்பைகளைப் பிரிப்பது, கழிவுநீர் மேலாண்மை பற்றியெல்லாம், மக்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்! என்னடா, சிறிய சிறிய விஷயம்தானே, இதையெல்லாம் முதலமைச்சர் சொல்ல வேண்டுமா என்று நினைக்கிறீர்களா? சிறிய சிறிய விஷயங்களை நாம் சரியாகச் செய்தாலே, பெரிய பெரிய நன்மைகள் நிச்சயம் உண்டாகும்! நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம் என்று எல்லோருக்குமே தெரியும்! இந்த நோயற்ற வாழ்வுக்குச் சுகாதாரம்தான் அடிப்படை!

மருத்துவ அலுவலர்களும், ஊராட்சி நிருவாகமும் ஒருங்கிணைந்து செயல்பட்டால், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு, கிராம மக்களுடைய ஆரோக்கியம் மேம்படும்! அதனால், நம்முடைய கிராமங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் யாருக்கும் அலட்சியம் இருக்கக் கூடாது!

அடுத்து, புவி வெப்பமடைதல்! உங்களுக்கு நன்றாகத் தெரியும்... இப்போதெல்லாம் முன்பு போல சரியான நேரத்துக்கு – சரியான அளவுக்கு மழை பெய்வதில்லை! இதற்குக் காரணம், காலநிலை மாற்றம்! இதுபற்றிய விழிப்புணர்வும், கிராம மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்!

அடுத்து, மக்களுடைய முக்கியப் பிரச்சினையாக இருப்பது, தண்ணீர் பற்றாக்குறை! "பணத்தைத் தண்ணியாகச் செலவழிக்கிறார்கள்" என்று சில பேர் சொல்லுவார்கள்... உண்மையில், "தண்ணியைத் தான் பணம் போல பார்த்துப், பார்த்துச் செலவழிக்க வேண்டும்". தண்ணீர்ப் பற்றாக்குறை வராமல் இருப்பதற்கு மழைநீர் சேகரிப்பு மிகவும் அவசியமானது! இதனால்தான், நிலத்தடி நீர்வளம் மேம்பட்டு, கிராமங்களுக்கு நீண்டகால நீர்ப் பாதுகாப்பு ஏற்படும்! இதற்கான பொறுப்பு, நம்முடைய எல்லோரிடமும் தான் இருக்கிறது!

எனவே, இதற்காக அரசும், ஊராட்சிகளும் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நீங்கள் எல்லோரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மழைக்காலம் தொடங்கப்போகிறது! டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்களைத் தடுக்கின்ற சுகாதார நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். வடகிழக்குப் பருவமழைக்கு முன்பே, அனைத்து ஊராட்சிகளிலும், அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வீதிகள், குடிநீர், மின்சாரம், வடிகால் போன்ற அடிப்படைச் சேவைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அவசரத் திட்டங்களை உடனே செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும், சமூக அமைப்புகள், பொதுமக்களின் பங்களிப்புடன் சிறப்புக் குழுக்களை அமைத்து, அவசர கால நடவடிக்கைகளைத் திட்டமிடவேண்டும். இதனால், பேரிடர் நேரங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளைக் குறைக்கலாம்,

அடுத்து, நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது- கிராம ஊராட்சிகளின் நிருவாகம், நிதி மேலாண்மை வெளிப்படையாக இருக்க வேண்டும். கிராம சபை மூலம் வரவு – செலவு கணக்குகள் மக்களிடம் விளக்கப்பட்டு, அவர்களின் ஒப்புதலோடு செயல்படவேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியும் எப்போது, எவ்வளவு செலவிட்டது என்று மக்கள் தெரிந்து கொள்கின்ற வகையில் தகவல்கள் பகிரப்படவேண்டும். இந்தக் கூட்டத்தில், நீங்கள் முன்வைக்கின்ற ஒவ்வொரு பரிந்துரையும் பல்வேறு திட்டங்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

நம்முடைய கிராமங்கள்தான் எதிர்கால வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், மக்கள் பங்கேற்போடு வளர்ச்சியை உறுதிசெய்கின்ற அரசு இது!

"கிராமத்தின் வலிமைதான் மாநிலத்தின் வலிமை" என்று நம்முடைய செயல்பாடுகளால் நிரூபித்துக் காட்டுவோம்!

நன்றி, வணக்கம்!

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாள்-15.10.2025

படமும்/செய்தியும்

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் 95-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 15.10.2025 அன்று சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தென்காசி மாவட்டத்தில், ரூ.587.39 கோடி செலவில், 2,44,469 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வழங்கினார் – 29.10.2025.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.10.2025 அன்று தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், 141 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிலான 117 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து, 291 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 83 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 2,44,469 பயனாளிகளுக்கு 587 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தென்காசி மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகளின் விவரங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், சங்கரன்கோவில், மேலகலங்கல் ஆகிய இடங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், குலசேகரமங்கலம், நக்கலமுத்தம்பட்டி, குலசேகரப்பேரி, மரியதாய்புரம் ஆகிய இடங்களில் நியாயவிலைக் கடைகள், திருமலாபுரம், அய்வாய்ப்புலிப்பட்டி ஆகிய இடங்களில் கலையரங்கங்கள், கடம்பன்குளம், மலையான்குளம், செவல்குளம், வாகைக்குளம் ஆகிய இடங்களில் சமுதாய நலக்கூடங்கள்,

சங்கரலிங்கபுரத்தில் பல்நோக்கு மையக் கட்டடம், தோப்புரெட்டிப்பட்டி, சத்திரக்கொண்டான் ஆகிய இடங்களில் பயணிகள் நிழற்குடைகள், கே.புதூர், காரிச்சாத்தான், இலத்தூர் ஆகிய இடங்களில் துணை, வட்டார சுகாதார மையக் கட்டடங்கள், ஏமன்பட்டியில் அங்கன்வாடி மையக் கட்டடம், மேலகலங்கல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, வென்றிலிங்கபுரம், கேளையாபிள்ளையூர், உள்ளார் தளவாய்புரம், தெற்கு அய்வாய்ப்புலிப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், பொட்டல்புதூர் புதுச்சேரி – வெங்கடாம்பட்டி, மலையான்குளம் – இராவுத்தப்பேரி, கோவிரலான்டானூர் – ஆவுடையாள்புரம், புளியன்குளம் – கொம்பன்குளம், பனையூர் – கூடலூர், தென்மலை – சோலைசேரி, சோலைசேரி – செந்தட்டியாபுரம், அ.மருதப்பபுரம் – குறிப்பன்குளம், நெட்டூர் அருந்ததியர் மயானச் சாலை, உடையாம்புலி – கொல்லன்குளம், ஆம்பூர் – கருத்தப்பிப்பிள்ளையூர், கடையநல்லூர்-வலசை, மேலப்பாவூர், வரகனூர் – செல்லப்பட்டி, இராஜபாளையம் – சங்கரன்கோவில் – ஆயாள்பட்டி, தென்மலை – அம்பை சாலை முதல் சில்லரைப்பரவு, கூடலூர் – நாதகிரி முருகன் கோவில் கிரிவலம் சாலை, சண்முகநாதபுரம் – இராயகிரி ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட சாலைகள், கோவிலாண்டானூரில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் என மொத்தம் 32 கோடியே 56 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் 43 முடிவுற்ற பணிகள்;

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், மேலநீலிதநல்லூரில் ஒரு கோடி ரூபாய் செலவில் நடுவக்குறிச்சி அரசு தோட்டக்கலைப் பண்ணை, கடையத்தில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் எலுமிச்சை சிறப்பு மையம்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், குருவிகுளத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அரசு ஆரம்ப சுகாதார மையம், தென்காசி அரசு மருத்துவமனையில் 22 கோடி ரூபாய் செலவில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனைக் கட்டடம், தென்காசியில் ஒரு கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம், இலத்தூர் ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில் 73 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பூசிக் கிடங்கு, குருவிக்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 16 இலட்சம் ரூபாய் செலவில் காசநோய்ப் பிரிவு;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், பண்பொழி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், ஆய்க்குடி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், சிறுநீர் கழிப்பிடத் தொகுதிகள், அச்சன்புதூர், ஆய்க்குடி, கீழப்பாவூர் ஆகிய இடங்களில் 95 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதார துணை மையங்கள், இராயகிரி பேரூராட்சியில் 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் நீர் வழங்கல் பணிகள், இலஞ்சியில் 22 இலட்சம் ரூபாய் செலவில் நூலகக் கட்டடம், ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் 14 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட நீர் விநியோகப் பணிகள்;

தென்காசி – திருநெல்வேலி பிரதான சாலையில் 5 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தினசரி சந்தை, போகநல்லூர், அண்ணாநகர் ஆகிய இடங்களில் உள்ள உரக்கிடங்குகளில் 92 இலட்சம் ரூபாய் செலவில் நுண்ணுயிர் உரக்குடில்கள், தென்காசி நகராட்சி தினசரி சந்தையில் 40 இலட்சம் ரூபாய்

செலவில் பொதுசுகாதார வளாகம், தென்காசி நகராட்சியில் 25 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் குழாய்கள், தென்காசி நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 16 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பறைகள், ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் 21 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் உறைக்கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டார், மலையான்தெரு கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, வாய்க்கால்பாலம் நீருந்து நிலையம் ஆகிய இடங்களில் 20 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்பட்ட கிருமி நாசினி இயந்திரங்கள், தென்காசி நகராட்சியின் பல்வேறு இடங்களில் 91 இலட்சம் ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் பணிகள்,

தென்காசி நகராட்சியின் பல்வேறு இடங்களில் 3 கோடியே 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் தார்சாலைப் பணிகள், சங்கரன்கோவில் அரசு பொது மருத்துவமனையில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவப் பயனாளிகளின் உதவியாளர்கள் தங்குமிடம், சங்கரன்கோவில் நகராட்சியில் 57 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தார்சாலைப் பணிகள், கடையநல்லூர் நகராட்சியில் 5 கோடியே 7 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு பகுதிகளில் சாலைப் பணிகள், சமுதாயக் கூடம், பேவர் பிளாக் பணிகள், தார்சாலைப் பணிகள், நீர் விநியோகத்திற்கான குழாய்ப் பாதைகள் இணைப்புப் பணிகள்,

புளியங்குடி நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் 4 கோடியே 50 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட தார்ச் சாலைப் பணிகள், செங்கோட்டை நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட சாலைகள், பேவர் பிளாக் பணிகள், சுரண்டை நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் 15 கோடியே 38 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கீழசுரண்டைக் கலத்தில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம், மலக்கசடு சுத்திகரிப்பு நிலையம், சிமெண்ட் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மேம்படுத்தப்பட்ட பணிகள், நடைபாதைத் தடுப்புகள், புதிய சாலைப் பணிகள், திறந்தவெளிக் கிணறு, பம்ப்செட், சுற்றுச்சுவர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, வடிகால், மதகுகள், சமுதாயக் கூடம், சமையலறை கொட்டகை;

ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வரதையன், பாலமார்த்தாண்டபுரம், திருமலையப்பபுரம் ஆகிய இடங்களில் 43 இலட்சத்து ஆயிரம் ரூபாய் செலவில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில், குற்றாலத்தில் 2 கோடியே 50 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், புளியங்குடி, சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் 3 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில், இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 3 கோடியே 70 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்ட மைய நூலகம், மாவட்ட நூலக அலுவலகம், மாறாந்தை, பூலாங்குளம், கூடலூர் ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 4 கோடியே 43 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் வகுப்பறைகள், ஆண்கள், பெண்கள் கழிப்பறைகள்;

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு, கிராமப்புற சாலைகள் திட்டத்தின்கீழ், சங்கரன்கோவிலில் (பருவக்குடி-கோவில்பட்டி) 6 கோடியே 93 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலம்;

என மொத்தம், 141 கோடியே 59 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலவிலான 117 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், கீழப்புதூரில் சமுதாய நலக் கூடம், வெள்ளக்கவுண்டம்பட்டியில் புதிய திறந்த வெளிக்கிணறு, சாலைப் பணிகள், வடிகால் அமைக்கும் பணிகள், நெல்கட்டும்செவல்

ஊராட்சியில் பூலித்தேவன் நினைவு திருமண மண்டபத்தில் உணவு அருந்தும் அறை, அலுவலக அறை, ஆண்கள், பெண்களுக்கான கழிப்பறைகள், சாலைப் பணிகள், வடிகால் அமைக்கும் பணிகள், உமையத்தலைவன்பட்டியில் நிட்சேபநதி ஆற்றின் குறுக்கே பாலம், கல்லூரணி, குலசேகரப்பட்டி, மருதன்கிணறு, வடக்குப்பணவடலி, குருக்கள்பட்டி, இடைகால், செந்தட்டியாபுரம், கரிவலம்வந்தநல்லூர், கம்பனேரி, கலிங்கப்பட்டி, திரிகூடபுரம், நாலாந்துலா, ஆயிரப்பேரி,பாட்டப்பத்து,கிளாங்காடு,சித்திரம்பட்டி, சாயமலை, வல்லம், குறிச்சான்பட்டி, மேலகலங்கல், வேலாயுதபுரம் ஆகிய பல்வேறு இடங்களில் சாலைப் பணிகள், வேலாயுதபுரம் கிராமத்தில் 60,000 லிட்டர் தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியுடன் குடிநீர் இணைப்பு, ஆயாள்பட்டியில் கலையரங்கம், இராஜபாண்டி, வெய்காலிப்பட்டி ஆகிய இடங்களில் துணை சுகாதார மையங்கள், வாசுதேவநல்லூர், நாரணாபுரம் ஆகிய இடங்களில் தடுப்பணைகள், நலங்குறிச்சி-மாறாந்தையில் புதிய ஆழ்துளைக் கிணறு, குழாய் பாதை நீட்டிப்புச் செய்யும் பணிகள் என மொத்தம் 24 கோடியே 8 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 51 பணிகள்;

குலையநேரி, நயினாபுரம், வேதம்புத்தூர் ஆகிய இடங்களில் 7 கோடியே 4 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடிக் கட்டடங்கள், செங்கோட்டையில் பாரம்பரிய திருவிதாங்கூர் நினைவு வளைவின் கட்டுமானம் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்தல், மறுசீரமைக்கும் பணிகள்;

எரிசக்தித் துறை சார்பில், இராயகிரி, குருக்கள்பட்டி, ஐந்தாம் கட்டளை, தாழை சுப்பிரமணியபுரம், கடங்கனேரி-வெங்கடேசபுரம் ஆகிய இடங்களில் 36 கோடியே 49 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள்;

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், தென்காசி புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தோழி விடுதி;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சிவகிரி பேரூராட்சி - சிவராமலிங்கபுரம் பள்ளி தெருக்கள், ஓடைத் தெரு, பெரியகடை பஜார், காமராஜர் மேற்குத்தெரு ஆகிய இடங்களில் 4 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலங்கள், அனந்தபுரத்தில் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தினசரி சந்தை, ஆலங்குளம் பேரூராட்சியில் 34 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் மேம்படுத்துதல், குடிநீர்த் திட்டப் பணிகள், புதிய பேரூராட்சி அலுவலகக் கட்டடம், அச்சன்புதூர், புதூர் (எஸ்), சாம்பவர் வடகரை ஆகிய பேரூராட்சிகளில் 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமூகநலக் கூடங்கள், வாசுதேவநல்லூர் அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொது சுகாதார பிரிவுக் கட்டடம், தென்காசி நகராட்சியில் 69 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள்;

நீர்வளத் துறை சார்பில், சாம்பவர் வடகரை-ஹனுமாநதி ஆற்றின் குறுக்கே 5 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை, இராமநதி அணையின் கரை 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கும் பணிகள்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கலிங்கப்பட்டியில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகக் கட்டடம்;

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், 94 கோடியே 50 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் சங்கரன்கோவில், தென்காசி புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், வாசுதேவநல்லூரில் 6 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் சேமிப்புக் கிடங்கு;

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை சார்பில், பசுமைப் பள்ளி திட்டத்தின்கீழ், ஊத்துமலை, வீரசிகாமணி, ஆழ்வார்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்,

பள்ளிக்கல்வித் துறை சார்பில், கரிசல் குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 17 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வகம், வீரசிகாமணியில் 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நூலகக் கட்டடம்;

என மொத்தம், 291 கோடியே 19 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 83 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தென்காசி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 50,650 பயனாளிகளுக்குக் கிராமக்கணக்கில் மாறுதல் செய்யாத இனங்களில் பட்டாக்கள் வழங்குதல், நத்தம் பட்டாக்கள், வகைபாடு மாற்றம், வரன்முறைப்பட்டாக்கள், கடையநல்லூர் நகர நில அளவைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், 6,230 பயனாளிகளுக்குக் கலைஞரின் கனவு இல்லம் திட்டம், பிரதமர் வீட்டுவசதித் திட்டம், முதல்வரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம், இலங்கைத் தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாமில் வீடு கட்டும் திட்டம், திருநங்கைகளுக்கான வீடு கட்டும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 20,667 பயனாளிகளுக்கு முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர்க் காப்போம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணுயிர்ப் பாசன திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், உணவு, ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள்;

வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், 201 பயனாளிகளுக்கு விவசாயிகளுக்கான அடமானக் கடன்கள், வேளாண் இடுபொருட்கள் ஏற்றுமதி பயிற்சிகள், இ-நாம், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை பயனுள்ள பயன்பாடு குறித்தப் பயிற்சிகள், வேளாண் உள்கட்டமைப்பு நிதி ஆகியவற்றின் கீழ் உதவிகள், வேளாண் பொறியியல் துறை சார்பில், 571 பயனாளிகளுக்கு வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராமங்கள் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், 67,953 பயனாளிகளுக்குத் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம்,

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில் ஒழுகும் வீட்டில் அப்பா வசித்து வருவதாக கண்ணீர் மல்க பேசிய மாணவி பிரேமா அவர்களுக்கு “கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ்” கீழ்ப்பாவூர் ஒன்றியம், ‘கழுநீர் குளத்தில் கட்டப்பட்டுவரும் வீட்டின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு.

மாநிலத் தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டம், நுண் நீர்ப்பாசனம், பனை மேம்பாட்டுத்திட்டம், மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், தேசியத் தோட்டக்கலை மிஷன் காய்கறி, பழத் தாவரத் தொகுப்புகள் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள்;

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 3,000 பயனாளிகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள், கூட்டுறவுத் துறை சார்பில், 28,300 பயனாளிகளுக்குப் பயிர்க்கடன், நகைக்கடன், பண்ணை சாராக் கடன், வீட்டுக்கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன், வீட்டு அடமானக் கடன், மாற்றுத்திறனாளி கடன், பெண் தொழில் முனைவோர், வேலை செய்யும் பெண்களுக்கான கடன்கள், சிறு வணிகக் கடன், விதவைக் கடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர் கடன், நாட்டுப்புறக் கலைஞர், தாட்கோ, டாப்செட்கோ, கல்விக்கடன், கலைஞரின் கைவினைத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், 200 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டி, பிற்படுத்தப்பட்டோர் நலவாரிய அட்டைகள், கிறித்தவத் தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய அட்டைகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், 550 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், பேட்டரி சக்கர நாற்காலிகள், புதுப்பிக்கப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள், நுண்ணறிப்பேசிகள், மடிக்கக்கூடிய சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில், 3,616 பயனாளிகளுக்குச் சுய தொழில் செய்பவர்கள், தொழில் முனைவோருக்கான முதலமைச்சரின் எழுச்சித் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், தனிநபர் கடன் ஆகிய பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய அடையாள அட்டைகள், மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், 599 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்கள், தேய்ப்புப் பெட்டிகள், பழங்குடியினர் நலவாரிய அட்டைகள்;

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 4,153 பயனாளிகளுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை, தீரா நோய்க்கான உதவித் தொகை, ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், தமிழ்நாடு

தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு.சுமதி அவர்களுக்குக் “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின்கீழ் வீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.10.2025 அன்று தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், “கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு.சுமதி அவர்களின் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.

"கலைஞரின் கனவு இல்லம்" திட்டம்

நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்கு மாற்றாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2010 ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை எய்திடும் வகையில் ‘கலைஞர் வீடு வழங்கும் திட்டம்’ அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டதன் அடிப்படையில் ‘குடிசையில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் ஊரகப் பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாகக் கட்டித்தர தமிழ்நாடு அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நிலையான கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய சொந்த வீடு கட்ட வேண்டும் என்ற கனவுடன் வாழும் ஊரக ஏழைக் குடும்பங்களின் கனவினை நிறைவேற்றும் வண்ணம் இத்திட்டம் அறிவிக்கப்பட்ட 2024-2025 ஆம் ஆண்டிலேயே ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டது.

கணக்கெடுப்பின் மூலம் ஏற்கெனவே கண்டறியப்பட்ட பயனாளிகளின் தகுதித்தன்மையை உறுதி செய்து அப்பயனாளிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர மேற்கண்ட கணக்கெடுப்பில் இடம் பெற்று வீடு கட்டுவதற்கு நிலம் இல்லாத பயனாளிகளுக்குப் பட்டா வழங்கியும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், வீடு வழங்கியும் வீடற்ற, நிலமற்ற பயனாளிகளின் கனவை இத்திட்டம் நிறைவேற்றியுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கான நோக்கம் மற்றும் திட்டத்தின் பயன்கள் விரைந்து மக்களைச் சென்றடையும் பொருட்டுப் “பயனாளிகள் தேர்வு செய்தல் முதல் தொகை விடுவித்தல்” வரையிலான அனைத்து நடைமுறைகளும் இணையம் வழியாக மேற்கொள்ளப்பட்டதால் தகுதியான பயனாளிகள் வீட்டினை விரைந்து கட்டி முடித்திட சாத்தியமானது. தமிழ்நாடு அரசு இதற்காக முனைப்புடன் செயல்பட்டதால் இத்திட்டம் பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதனால் 2024-2025 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளும் ரூ.3,500 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக 2024–2025ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் விவரம்

வ. எண்	மாவட்டம்	அனுமதிக்கப்பட்டு முடிவுற்ற வீடுகள்
1	அரியலூர்	3,491
2	செங்கல்பட்டு	3,990
3	கோயம்புத்தூர்	1,428
4	கடலூர்	3,500
5	தருமபுரி	3,985
6	திண்டுக்கல்	6,125
7	ஈரோடு	3,940
8	கள்ளக்குறிச்சி	2,965
9	காஞ்சிபுரம்	2,855
10	கன்னியாகுமரி	1,790
11	கரூர்	742
12	கிருஷ்ணகிரி	3,443
13	மதுரை	3,468

வ. எண்	மாவட்டம்	அனுமதிக்கப்பட்டு முடிவுற்ற வீடுகள்
14	மயிலாடுதுறை	2,498
15	நாகப்பட்டினம்	2,500
16	நாமக்கல்	5,800
17	பெரம்பலூர்	1,200
18	புதுக்கோட்டை	3,250
19	இராமநாதபுரம்	2,400
20	இராணிப்பேட்டை	3,000
21	சேலம்	3,500
22	சிவகங்கை	741
23	தென்காசி	424
24	தஞ்சாவூர்	3,000
25	நீலகிரி	1,297
26	தேனி	961
27	தூத்துக்குடி	1,673
28	திருச்சிராப்பள்ளி	4,000
29	திருநெல்வேலி	717
30	திருப்பத்தூர்	3,000
31	திருப்பூர்	1,411
32	திருவள்ளூர்	4,000
33	திருவண்ணாமலை	3,114
34	திருவாரூர்	2,570
35	வேலூர்	2,711
36	விழுப்புரம்	3,500
37	விருதுநகர்	1,011
	மொத்தம்	**1,00,000**

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்ட ஓராண்டிற்குள்ளேயே ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் பொருட்டு தென்காசியில் நடைபெற்ற அரசின் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் ஒரு இலட்சமாவது பயனாளியான தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு.சுமதி அவர்களிடம் வீட்டிற்கான சாவியினை வழங்கினார்.

இதேபோன்று, 2025-2026-ஆம் ஆண்டில், மேலும் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, இதுநாள் வரை 16,245 வீடுகள் உடனடியாக முடிவுறும் நிலையிலும், 83,755 வீடுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திலும் இருந்து வருகின்றன. இவை அனைத்தும் 2025-2026 ஆம் நிதியாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், 15,000 பயனாளிகளுக்கு வாழ்வாதார நிதியின் கீழ் உதவிகள், 18,266 பயனாளிகளுக்குச் சுய உதவிக்குழு அடையாள அட்டைகள், மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில், 565 பயனாளிகளுக்குக் கல்விக் கடன் உதவிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், 1,039 பயனாளிகளுக்குப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவிகள், சமையல் உதவியாளர்களுக்கான பணி நியமன ஆணைகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 3,000 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 11,276 பயனாளிகளுக்கு டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், 7,954 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்துத் தொகுப்புத் திட்டம், தொழில் வணிகத் துறை சார்பில், 500 பயனாளிகளுக்கு கலைஞரின் கைவினைத் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் வணிகச் சாம்பியன் திட்டம் ஆகியவற்றின் கீழ் உதவிகள்;

என பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 587 கோடியே 38 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,44,469 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மக்களின் உயிரே முக்கியம்...
மக்களின் உயிர் விலைமதிப்பற்றது...

கரூர், வேலுச்சாமிபுரத்தில் நடைபெற்ற துயரச் சம்பவம் தொடர்பாகத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை - 15.10.2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கரூர் சம்பவம் குறித்துப் பேசவிருக்கிற கருத்துக்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு, கூட்டு முயற்சியில் வலுசேர்க்கக்கூடிய அனைத்தையும் உறுதியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம் என்பதை முதலிலேயே அரசின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்த துயரச் சம்பவம் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனதையும் உலுக்கியது. நம் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்கும், சோகத்திற்கும் உள்ளாக்கியது. இறந்தவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியை நான் செலுத்துகிறேன். உறவுகளை இழந்தவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர், வேலுச்சாமிபுரத்தில் கடந்த 27.09.2025 அன்று தமிழக வெற்றிக் கழக கட்சித் தலைவரின் அரசியல் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்தக் கட்சியின் கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் பல்வேறு இடங்களைக் குறிப்பிட்டு அனுமதி கோரியதையடுத்து, அவர் அனுமதி கோரிய இடங்களில், போக்குவரத்து நெரிசல் இருக்கும் என்பதாலும், பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படும் என்பதாலும், பாதுகாப்புக் காரணங்களாலும் அனுமதி வழங்கவில்லை. 25.09.2025 காலை லைட்ஹவுஸ் கார்னர் அல்லது உழவர் சந்தை பகுதியில் கூட்டம் நடத்த அனுமதி கோரிய மனுவும், கூட்ட அளவு மதிப்பீடு மற்றும் பாதுகாப்புக் காரணங்களால் அனுமதி வழங்க இயலவில்லை. பிறகு 26.09.2025 அன்று, அக்கட்சியின் மேற்கு மாவட்டச் செயலாளர் வேலுச்சாமிபுரத்தில் 27.09.2025 அன்று மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்த அனுமதி கோரினார். அவர் கொடுத்த மனு ஏற்கப்பட்டு, 11 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது.

கரூர் நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு அரசின் காவல் துறையின் சார்பாகக் கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 5 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 18 ஆய்வாளர்கள், 75 உதவி ஆய்வாளர்கள், ஆயுதப்படைக் காவலர்கள் உள்ளிட்ட 517 காவலர்கள் கரூர் மாவட்டத்திலிருந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதுமட்டுமின்றி, வெளி மாவட்டங்களிலிருந்து 1 காவல் துணை கண்காணிப்பாளர், 2 ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள், 60 ஆயுதப்படைக் காவலர்கள், 20 அதிவிரைவுப்படைக் காவலர்கள் என 91 பேர் வரவழைக்கப்பட்டிருந்தனர். அன்றையதினம் பாதுகாப்புப் பணிக்காக அதிகாரிகள், காவலர்கள் என மொத்தம் 606 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காவல்துறையைப் பொறுத்தவரை, வழக்கமாக அரசியல் பரப்புரைக் கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக் காவலர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது.

பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் 10 ஆயிரம் பேர் வருவார்கள் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அதைவிட அதிகமாகக் கூட்டம் வரும் என்று எதிர்பார்த்துக் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கூட்டம் நடத்த அனுமதி கோரி கொடுத்த கடிதத்தில் மாலை 3 முதல் இரவு 10 மணி வரை என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சித் தலைவர் கரூர் வருவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்திருந்தார். இதனால் கரூரில் காலை முதலே மக்கள் வரத் தொடங்கிவிட்டனர்.

27.09.2025 அன்று, அக்கட்சியின் தலைவர் சென்னையிலிருந்து, காலை 8.40 மணிக்குப் புறப்பட்டு, 9.25 மணிக்குத் திருச்சி வந்தடைந்தார். அதன் பின்னர் நாமக்கல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிறகு, கரூருக்கு இரவு 7 மணிக்கு வந்துள்ளார். அதாவது அறிவிக்கப்பட்ட 12 மணியைக் கடந்து, 7 மணி நேரம் கழித்துத்தான் வந்தார். இந்தக் காலதாமதம் கூட்ட நெரிசலுக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

இங்கே அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். கூட்ட ஏற்பாட்டாளர்கள் சில முக்கியமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவை அன்றையதினம் கரூரில் செய்யப்படவில்லை. காலை முதல் காத்திருந்த மக்களுக்குப் போதிய குடிநீர் வழங்கவில்லை; உணவு வழங்க எந்தவிதமான ஏற்பாடுகளும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களால் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளைக் கழிக்க பெண்களால் வெளியில் செல்ல முடியவில்லை.

சம்பவம் நடந்த அதே வேலுச்சாமிபுரத்தில் இதற்கு இரு தினங்களுக்கு முன்பாக, அதாவது, 25.09.2025 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கலந்துகொண்ட பரப்புரை நிகழ்ச்சி நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு, கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டனர். எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் அக்கூட்டம் நடந்து முடிந்தது. அதில் சுமார் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் பங்கேற்றனர். அந்தப் பரப்புரைக் கூட்டத்திற்குச் சுமார் 137 காவலர்களும், 30 ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், அதற்கு நேர்மாறாக இந்தக் கட்சியின் நிகழ்ச்சி நடந்துள்ளது.

கரூர் மாவட்ட எல்லை தவிட்டுப்பாளையம் சோதனைச் சாவடி நிகழ்ச்சிக்குப் பின் கேரவன் வாகனத்தைப் பின்தொடர்ந்து பெருவாரியான ரசிகர்களும், கட்சியினரும் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வந்து கொண்டிருந்தனர். நிகழ்ச்சி நடைபெறும் பகுதியில் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், பிரச்சார வாகனத்தின் பின்னால் ஏராளமானோர் வந்ததாலும், கரூர் நகர உட்கோட்ட

காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், பிரச்சார வாகனத்தில் இருந்த ஏற்பாட்டாளர்களை அக்ஷயா மருத்துவமனை அருகே நிறுத்திக் கூட்டத்தில் உரையாற்றுமாறு அறிவுறுத்தினர். அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், முன்பே அனுமதிக்கப்பட்ட இடத்தில்தான் பேசுவோம் என்று பிடிவாதமாகத் தொடர்ந்து முன்னேறிச் சென்றனர். கரூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அக்கட்சியின் இணைச் செயலாளரிடம் பலமுறை தொடர்புகொண்டு பிரச்சார வாகனத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டும், அவர், த.வெ.க. கட்சியின் தலைவர் தனது உரையைத் தொடங்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த வழிமுறைகளை மீறி, வாகனம் அக்ஷயா மருத்துவமனையிலிருந்து, 30-35 மீட்டர் தூரம் சென்றபோது இருபுறமும் இருந்த கூட்டத்தினரை இது நிலைகுலையச் செய்தது. இதனால் கூட்டத்தில் பல இடங்களில் அலைமோதல் ஏற்பட்டிருக்கிறது. கூட்டத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மத்தியில் பீதி, மூச்சுத் திணறல், மயக்கம், நெரிசல் ஏற்பட்டன. பலரும் கீழே விழுந்து மிதிபட்டிருக்கிறார்கள்.

கூட்டத்தின் ஒருபகுதியினர் ஜெனரேட்டர் பகுதிக்குள் நுழைந்து, தகரக் கொட்டகையை அகற்றியும் வெளியேற முயற்சி செய்திருக்கிறார்கள். இதனால் மின்சாரம் தாக்குவதைத் தடுக்க, ஜெனரேட்டர் ஆபரேட்டர் மின்சாரத்தைத் துண்டித்திருக்கிறார்.

நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் கூட்ட நெரிசலால் காயமடைந்தும், சோர்வினால் மயக்கமடைந்தும் மக்கள் உதவிகோருவதைக் கவனித்து, காவல் துறையினர் மருத்துவமனை ஆம்புலன்சுக்கு தகவல் அனுப்பி வரவழைத்திருக்கிறார்கள். இவ்வாறு கூட்ட நெரிசல் ஏற்பட்டபோது அவர்களைக் காப்பாற்றத்தான் ஆம்புலன்ஸ் வந்ததே தவிர, நெரிசல் ஏற்படுவதற்கு முன்பு எந்த ஆம்புலன்சும் வரவில்லை. காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினர், ஆம்புலன்ஸ் மீட்புக் குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு, அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, த.வெ.க. கட்சியினர், இரண்டு ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களைத் தாக்கி, ஆம்புலன்ஸ் வாகனத்தைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் மீட்புப் பணிகள் தடைபட்டன. இது தொடர்பாக, கரூர் நகரக் காவல் நிலையத்தில், இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்துவருகிறது. சம்பந்தப்பட்ட நபர் கரூர் நீதித்துறை நடுவர் முன்பு சரணடைந்திருக்கிறார். மற்றொரு குற்றவாளி, இரண்டு வழக்குகளிலும் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கரூரில் தமிழக வெற்றிக் கழக கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில், நெரிசல் ஏற்பட்டு மக்கள் இறப்பு ஏற்பட்டுள்ளது என்ற தகவல் அறிந்த உடனேயே தமிழ்நாடு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், முதன்மைச் செயலாளர், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் உள்ளிட்டோர் உடனடியாக கரூருக்கு அனுப்பப்பட்டார்கள்.

மேலும், அன்றிரவே நானும் கரூருக்குச் சென்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் கூறினேன். கரூர் துயரத்தைக் கேள்விப்பட்டதும் என்னால் வீட்டில் இருக்க முடியவில்லை. அதனால்தான் உடனடியாகக் கரூருக்கு அன்றைய இரவே சென்றேன். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களை நேரில் பார்வையிட்டு, மருத்துவர்களுடன் ஆலோசித்து உத்தரவுகள் பிறப்பித்தேன். அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டன. அமைச்சர்கள் பலரும் அங்கு சென்று பணியாற்றினார்கள்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்ட முதல் நபர் இரவு 7.47 மணிக்கு அனுமதிக்கப்பட்டார். தொடர்ச்சியாக 200-க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டார்கள். அனுமதிக்கப்பட்டவர்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிப்பதற்காகச் சேலம், நாமக்கல், மதுரை, திருச்சி, திண்டுக்கல், கோயம்புத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்து 152 மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள் வந்து பணியில் ஈடுபட்டார்கள். பொதுச் சுகாதார இயக்குநர் தலைமையில் கூடுதல் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

கரூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 700 படுக்கைகளோடு எந்த அவசர நிலையையும் சமாளிக்க ஏதுவாக, கூடுதல் 400 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 24 மணி நேர அவசரச் சிகிச்சை மையம், சிடி ஸ்கேன், ஆய்வகங்கள் செயல்பட்டன. பணிகளை விரைவுபடுத்திட திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அம்மாவட்ட மருத்துவக் குழுவினர் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்து "Help Desk" அமைத்து, இறந்தவர்களின் உடல்களைக் காவல் துறை உதவியோடு அடையாளம்கண்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை அலுவலர்களின் உதவியோடு உடற்கூறாய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தனர். கரூருக்கு அருகில் உள்ள சேலம், நாமக்கல் மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் மருத்துவக் கல்லூரியில் இருந்து சிறப்பு மருத்துவக் குழுக்களுடன் 27.09.2025 அன்றிரவு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்தனர். இதுதவிர, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கோயம்புத்தூர், புதுக்கோட்டை உள்ளிட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் இருந்தும் சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக வல்லுநர்கள், பிரேதப் பரிசோதனை உதவியாளர்கள் என மொத்தம் 152 பேர் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்தனர்.

இச்சம்பவத்தில் சிகிச்சை பெற்று வந்த அனைவரும் வீடு திரும்பியிருக்கிறார்கள். ஒருவர் மட்டும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலே இருக்கிறார். உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 41. இதில் ஆண்கள் 13 பேர், பெண்கள் 18 பேர், குழந்தைகள் 10 பேர். கரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பிணவறையில், இறந்த அனைத்து உடல்களையும் குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதற்குப் போதிய வசதி இல்லாத காரணத்தினால் அன்று இரவில் உடற்கூராய்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் சிறப்பு அனுமதி பெற்று உடற்கூராய்வு மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக, உடற்கூராய்வு நடைமுறையை முடித்து பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டி கரூர் அரசு மருத்துவக் கல்லூரி தடயவியல் துறைத் தலைவர் மரு.சங்கர் அவர்களின் தலைமையில் 24 மருத்துவர்கள், 16 உதவிப் பணியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு உடற்கூராய்வு செய்யப்பட்டது. 28.09.2025 அன்று அதிகாலை 1.45 மணிக்கு, முதல் உடற்கூராய்வு தொடங்கப்பட்டு, 28.09.2025 அன்று மதியம் 1.10 மணியளவில் 39ஆவது உடற்கூராய்வு முடிவுற்றது. காவல் துறை உயர் அதிகாரிகளின் தலைமையில் 200-க்கும் மேற்பட்ட காவலர்கள், 27.09.2025 அன்று கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் குழுமிய பெரும் கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தி எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படாமல் கவனித்துக் கொண்டனர்.

துயரமான இச்சம்பவத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கும் தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. தீவிர காயமடைந்த 47 நபர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், வெளிநோயாளிகளாகச் சிகிச்சைப் பெற்ற 55 நபர்களுக்குத் தலா 50,000 ரூபாயும் என மொத்தம் 143 நபர்களுக்கு 4.84 கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை விசாரிக்க, 28.09.2025 அன்று ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, 03.10.2025 அன்று ஐ.ஜி., திரு. அஸ்ரா கார்க், I.P.S., அவர்கள் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு இந்தச் சம்பவத்தைச் சட்டப்படி விரைந்து கையாண்டது. அனுமதி வழங்கல், மருத்துவ உதவி, நிவாரண விநியோகம் அனைத்தும் சரியான முறையில் நடந்தன. இதுபோன்ற துயரங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இச்சம்பவம் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் இவ்வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்காக ஒப்படைக்கப்பட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நான் எனது ஐம்பது ஆண்டுகால பொதுவாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறேன், நடத்தியும் இருக்கிறேன். இங்குள்ள அனைத்து அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இத்தகைய அனுபவம் கொண்டவர்கள்தான். மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தும்போது, அதற்குரிய சட்ட திட்டங்களுக்கும், நெறிமுறைகளுக்கும், பொது ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அப்படித்தான் நடத்த வேண்டும். கட்டுப்பாடுகளை மீறும்போது, அதனால் பாதிக்கப்படுவது நிகழ்ச்சி நடத்தும் கட்சியின் தொண்டர்கள்தான், நமது தமிழ்நாடு மக்கள்தான். சமூக வலைத்தளங்களில் தேவையற்ற வதந்திகள் பரவியபோது அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வீடியோ மூலமாக எந்த அரசியல் கட்சித் தலைவரும் தன் கட்சித் தொண்டர்களும், அப்பாவி பொதுமக்களும் இறப்பதை விரும்பமாட்டார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன். இறந்தவர்கள் நமது உறவுகள் என்பதை மனதில் வைத்து அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அதுமட்டுமின்றி, அரசின் உயர் அலுவலர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் செய்தியாளர்களைச் சந்தித்து உண்மை நிலையை வீடியோக்களுடன் ஆதாரத்தோடு தெளிவுபடுத்தினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவரையும் காத்தது நமது அரசு. அனைவருக்கும் உரிய சிகிச்சை அளித்தது நமது அரசு. மாண்பமை உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்பதை நான் இங்கே உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இதுபோன்ற துயரச் சம்பவம் இனி நடக்கக்கூடாது என்ற உறுதியை அனைத்து அரசியல் இயக்கங்களும், பொது அமைப்புகளும் எடுக்க வேண்டும். அனைத்தையும்விட மக்களின் உயிரே முக்கியம், மக்களின் உயிர் விலைமதிப்பற்றது. இதை மனதில் வைத்துச் செயல்படவேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

வணக்கம்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாள்-02.10.2025

படமும் / செய்தியும்

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157ஆவது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2025 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

“ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுக்கும்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆற்றிய உரை - 17.10.2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் தொடர்பான விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கெல்லாம் மிகத்தெளிவாக, துல்லியமாகப் பதிலளித்து நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சிறப்பாக இங்கே பேசியிருக்கிறார். அவருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நேற்றைய விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், ஆணவப் படுகொலை குறித்துத் தெரிவித்த சில கருத்துக்களுக்கு நான் இப்பேரவைக்குத் தங்கள் வாயிலாகப் பதிலளிக்க விரும்புகிறேன்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ - என்ற அறநெறியை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொன்ன வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண், இந்தத் தமிழ் மண்!

‘சாதி யிரண்டொழிய வேறில்லை,
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்’

என்கிறார் அவ்வை மூதாட்டி.

இதுதான் தமிழர் தம் நெறியாகும். தமிழர் போற்றி வந்த பண்பாடு! இடைக்காலத்தில் புகுந்தவர்களால் தொழில் வேற்றுமையானது; சாதி வேற்றுமையாக மாற்றப்பட்டது; உயர்வு-தாழ்வு கற்பிக்கப்பட்டது; மேல்-கீழ் என்ற வேற்றுமை விதைக்கப்பட்டது. வேற்றுமை விதைக்கப்பட்ட உடனேயே ஒற்றுமைக்கான குரல்களும் தமிழ் மண்ணில் உரக்க ஒலித்ததைக் காண்கிறோம்.

பல சீர்திருத்தக் கருத்துகள் இயக்கமாகவே உருவெடுத்துள்ளன. அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா ஆகியோர் இந்த சீர்திருத்தச் சிந்தனைகளைத் தமிழ் மண்ணில் விதைத்தார்கள்.

கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதவிகள், அனைவருக்கும் சமவாய்ப்பு, சம அதிகாரம் ஆகியவற்றைத் தருவதன் மூலமாக யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே இந்த இயக்கங்கள் போராடின; வாதாடின; மன மாற்றங்களைச் செய்தன. சாதிக்கு, மதத்துக்கு தரப்பட்ட முக்கியத்துவத்தைத் தமிழ் மொழிக்கு, தமிழ் இனத்துக்கு தரும் சிந்தனையைத் திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கங்கள் விதைத்தன. இனமும், மொழியும் நமது அடையாளங்களாக மாற்றியது இதன் சாதனைகள்.

சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புரை செய்து வந்த அதே காலக்கட்டத்தில் அதற்கான சட்டங்களையும், திட்டங்களையும் கொண்டு வந்து, சமூக சீர்திருத்த ஆட்சியைத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நடத்தினார்கள். அதன் வழித்தடத்தில் 'திராவிட மாடல்' ஆட்சியை நாங்கள் நெஞ்சை நிமிர்த்தி நடத்தி வருகிறோம்.

சமூகநீதி உறுதிமொழி

அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கி இருக்கிறோம். பெரியார் பிறந்த நாளிலும், அம்பேத்கர் பிறந்த நாளிலும் இந்த நாடே உறுதிமொழி எடுக்கிறது. இவர்கள் பிறந்த நாளில் அனைவரும் சமூகநீதி, சமநீதி உறுதிமொழி எடுப்பது சாதாரணமான சாதனையல்ல. தமிழ்நாடு சட்டப்பேரவை, இதே அவையில் 29.04.2025 அன்று உரையாற்றிய போது, ஆதிக்கத்தின் அடையாளமாகவும் தீண்டாமைக்கான குறியீடாகவும் வசைச் சொல்லாகவும் இருக்கும் "காலனி" என்ற சொல்லை நீக்குவோம் என்று அறிவித்தேன். பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்பதற்காக, அவற்றைச் "சமூக நீதி" விடுதிகளாகப் பெயர் மாற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைச் சமீபத்தில் நேரில் சந்தித்து, முக்கியமான ஒரு கோரிக்கையை வைத்தேன். "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில், இறுதி எழுத்தில் முடிவடையும் 'இன்' என்பதற்குப் பதிலாக 'இர்' என விகுதி மாற்றம் செய்து, அந்தச் சமூக மக்களுக்கு உரிய மரியாதை கிடைக்க வழி செய்யும் வண்ணம் ஒன்றிய அரசு உரிய சட்டம் இயற்ற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்பதுதான் அந்தக் கோரிக்கை.

சமூகநீதி – சமத்துவம் – சகோதரத்துவம் – பொதுவுடைமை – பொது உரிமை – கல்வி உரிமை – அதிகார உரிமை ஆகிய கொள்கைகள்தான் வேற்றுமையை, பகைமையை விரட்டும். அதனைத் தான் நாங்கள் செய்து வருகிறோம். இதன் மூலமாகத்தான் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும்.

உலகம் அறிவுமயமாகி வருகிறது

ஆனால், இத்தகைய சூழலில் நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் நமது மனதை வேதனையடைய வைத்துள்ளன. இதற்காகவா நமது தலைவர்கள் போராடினார்கள், நாம் போராடி வருகிறோம் என்ற வேதனை ஏற்படுகிறது. உலகம் அறிவுமயமாகி வருகிறது. "ஆனால் அன்புமயம் ஆவதை எது தடுக்கிறது?" என்பதுதான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்கப் பரவி, அறிவினால் மதிக்கப்பட்டு வரும் நம் தமிழ்ச் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக்கொள்வது என்ன நியாயம்? என்பதுதான் நம்மை வருத்தும் கேள்வியாக அமைந்திருக்கிறது. எதன் காரணமாகவும் ஒருவரை மற்றவர் கொல்வதை நாகரிகச் சமுதாயத்தால் ஏற்க இயலாது. கொல்வதை மட்டுமல்ல – பகைப்பதை, சண்டை போட்டுக்கொள்வதை, அவமானப்படுத்துவதை என எதையும் பண்பட்ட, வளர்ச்சியுற்ற ஒரு சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வப்போது ஏதேனும் ஒரு பகுதியில் நடந்துவிடும் ஒரு துயரமான சம்பவம் நம் நெஞ்சை உலுக்கி விடுகிறது. நம் சமுதாயத்தையே தலைகுனியச் செய்து விடுகிறது. பெண்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்கும் உரிமையைப் பறிக்கும் ஆணாதிக்கமும் இந்தக் குற்றச் செயல்களுக்குப்

பின்னால் ஒளிந்திருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இந்த வேதனையைத்தான் நேற்றைய தினம் நமது உறுப்பினர்கள் பலரும் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறீர்கள். ஆணவப் படுகொலைகளைத் தடுக்க வேண்டும், எப்படியாவது தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

சமுதாய மாற்றம்

சமீபத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டில், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தீர்மானமாக நிறைவேற்றி என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்தி, அதன் மூலம் இந்த அநீதியைத் தடுக்க வேண்டும் என்பது நம் அனைவரது ஆதங்கமாக இருக்கிறது.

ஆணவப் படுகொலை நடைபெறும்போது, அது தொடர்பான வழக்குகள் அனைத்திலும் கடுமையானப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இப்படுகொலைகளுக்குச் சாதி மட்டுமே காரணமல்ல, இன்னும் பல காரணங்களும் இருக்கின்றன. எதன்பொருட்டு நடந்தாலும், கொலை – கொலைதான். அதற்கான தண்டனைகள் மிக, மிகக் கடுமையாகவே தரப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் உடனடியாகக் குண்டர் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சட்டம் அதன் கடமையைச் செய்யும்

யாரும் – எவரும் – எதன்பொருட்டும், செய்த குற்றத்தில் இருந்து தண்டனை இல்லாமல் தப்பிவிடக் கூடாது என்பதைக் காவல் துறைக்கு உத்தரவாகப் போட்டுள்ளோம். எனவே, சட்டம் அதன் கடமையைச் செய்கிறது.

அதே நேரத்தில், இக்கொடூரமான சிந்தனைக்கு எதிரான விழிப்புணர்வுப் பரப்புரையை சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் மட்டுமல்ல; அரசியல் இயக்கங்களும், பொதுநல அமைப்புகளும் செய்ய வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். நாகரிக சமுதாயத்தின் அடையாளம் என்பது பொருளாதார மேம்பாடு மட்டுமல்ல, சமூகச் சிந்தனையில் மேம்பாடு என்பதை உணர்த்துவதாக இப்பரப்புரைகள் இருக்க வேண்டும். சமுதாயத்தில் சாதி வேற்றுமைக்கு எதிராக, ஆதிக்க மனப்பான்மைக்கு எதிராக அனைவரும் பேச வேண்டும். மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் ஏதுமில்லை; அனைவரும் சமம்; பாலின சமத்துவமும், வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்திற்கு ஒரு அடையாளம் என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள்.

அனைவரின் கடமை

அனைத்துவிதமான ஆதிக்க மனப்பான்மைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஆதிக்க எதிர்ப்பும் – சமத்துவச் சிந்தனையும் கொண்ட சுயமரியாதையும் – அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஓர் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை! சீர்திருத்தப் பரப்புரையும் – குற்றத்திற்கான தண்டனையும், வாளும் கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது குறித்துத் தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் சட்ட வல்லுநர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்பதை என்னுடைய முக்கியமான அறிவிப்பாக இம்மாமன்றத்தில் அறிவிக்கிறேன்.

இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் பெற்று, இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதி அளித்து அமைகிறேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2025 நிறைவு விழா

முதல் மூன்று இடங்களைப் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கோப்பைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்–14.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.10.2025 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், முதலிடத்தைப் பெற்ற சென்னை மாவட்டம், இரண்டாம் இடத்தைப் பெற்ற செங்கல்பட்டு மாவட்டம், மூன்றாம் இடத்தைப் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2025

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 07.10.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2025ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான

விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2025 நடத்திட மொத்தம் 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 37 கோடி ரூபாய் பரிசுத் தொகையுடன் நடைபெற்ற மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியாகும். இது, தமிழ்நாடு அரசு விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொண்டுள்ள மற்றொரு முக்கியமான மைல்கல் ஆகும். இதன்மூலம் அனைத்துத் தரப்பினரையும் விளையாட்டில் ஈடுபடச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், திறமையான வீரர்களைப் பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உரிய அங்கீகாரம், பரிசுகளை வழங்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல், விளையாட்டு வீரர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கும் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்திடும் வகையில் அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. முதலமைச்சர் கோப்பை போட்டிகள் வெறும் போட்டிகளாக அல்லாமல், வயது, பகுதி, போன்ற எல்லைகளைத் தாண்டிய திறமை, உறுதியின் கொண்டாட்டமாக மாறியுள்ளன. இப்போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட, மண்டல, மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்த 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டின் வெற்றிகரமான அனுபவம், இவ்வாண்டு போட்டியை மேலும் பெரிய அளவில் நடத்த வழிவகுத்துள்ளது. 2025-ஆம் ஆண்டின் மாவட்ட, மண்டல அளவிலான போட்டிகள் செப்டம்பர் 12, 2025 அன்று நிறைவடைந்து, மாநில அளவிலான போட்டிகள் அக்டோபர் 2 முதல் 14, 2025 வரை நடைபெற்றன.

2025-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின்

அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் 16,28,338 பேர் ஆன்லைனில் பதிவு செய்துள்ளனர். இவர்கள் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் ஆகிய ஐந்து பிரிவினராவர். மொத்தம் 38 தனிநபர், குழு விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் பங்கேற்றனர். இதில் 32,000 க்கும் மேற்பட்ட வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். இப்போட்டிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், திண்டுக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், திருவண்ணாமலை, சேலம், செங்கல்பட்டு ஆகிய 13 நகரங்களில் நடைபெற்றன.

மாநில அளவிலான போட்டிகளில் பரிசுத் தொகை, தனிநபர் பிரிவில், முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ.1,00,000/-, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.75,000/-, மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.50,000/-மும், குழு விளையாட்டுகளில், முதலிடத்தில் வெற்றிபெற்ற அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.75,000/-, இரண்டாம் இடத்திற்குரிய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ. 50,000/-, மூன்றாம் இடத்திற்குரிய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.25,000/-மும், இதனுடன் கல்வி உதவித் தொகைகள், அங்கீகாரம், வேலைவாய்ப்புகள் போன்ற பல நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டின் முக்கிய அம்சமாக, e-Sports முதன்முறையாகப் போட்டி நிகழ்வாகவும், மற்ற போட்டிகளுக்கு நிகராகப் பரிசுத்தொகையுடன் நடத்தப்பட்டது. மேலும், பாரம்பரிய விளையாட்டுகளுக்கு அளிக்கப்படும் ஆதரவையும் உறுதிப்படுத்தியது.

இதற்கு முன் இல்லாத அளவிலான பதிவு எண்ணிக்கைகள், பெரும் பரிசுத் தொகை, e-Sports போன்ற புதுமையான பிரிவுகளின் அறிமுகத்துடன், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்- 2025, தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய, அனைவர் பங்கேற்பும் உறுதி செய்யப்பட்ட விளையாட்டு நிகழ்வாக அமைந்தது. இது தமிழ்நாடு அரசின் விளையாட்டு வளர்ச்சிக்கான பார்வையையும், சமூகப் பங்கேற்பையும் ஊக்குவிக்கும் உறுதியையும் பிரதிபலிக்கிறது.

மேலும், Games Management System (GMS) மூலம் முதலமைச்சர் கோப்பை தொடர்பான அனைத்துத் தகவல்களும் – பதக்க நிலை, வெற்றியாளர்கள் பட்டியல், மதிப்பெண்கள், வீரர் விவரங்கள்

உள்ளிட்ட அனைத்தும் – அதிகாரப்பூர்வ இணையதளம் www.tncmtrophy.sdat.in மூலம் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டு, பொதுமக்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் முதன்முறையாக ஒரு WhatsApp Chatbot அறிமுகப்படுத்தப்பட்டு, இதன்மூலம் பயனர்கள் போட்டி மதிப்பெண்கள், முடிவுகள், நிகழ்வுப் புதுப்பிப்புகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். இந்திய அளவில் முதன்முறையாக, இத்தகைய டிஜிட்டல் வசதிகள் அடிப்படை நிலை விளையாட்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன முயற்சியின் மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) முழுமையான நிகழ்வு மின்மயப்படுத்தலில் (Digitization) முன்னோடியாகத் திகழ்கிறது. இதன்மூலம் விளையாட்டு வீரர்கள், அரசு உயர் அலுவலர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் எளிமையான அணுகல், வெளிப்படைத்தன்மை, நேரடித் தொடர்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை வென்ற மாவட்டங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கோப்பைகளை வழங்குதல்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2025இல் பள்ளி, கல்லூரி, மாற்றுத்திறனாளி, அரசு பணியாளர்கள், பொதுமக்கள் என்ற ஐந்து பிரிவுகளின்கீழ்த் தடகளம், டென்னிஸ், கூடைப்பந்து, கால்பந்து, பளு தூக்குதல் உள்ளிட்ட 37 வகை விளையாட்டுப் பிரிவுகளில் மொத்தம் 196 போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 109 தங்கம், 90 வெள்ளி, 82 வெண்கலம் என மொத்தம் 281 பதக்கங்களுடன் சென்னை மாவட்டம் முதலிடத்தையும், 36 தங்கம், 22 வெள்ளி, 30 வெண்கலம் என 88 பதக்கங்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாம் இடத்தையும், 33 தங்கம், 27 வெள்ளி, 35 வெண்கலம் என 95 பதக்கங்களுடன் கோயம்புத்தூர் மாவட்டம்

மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாவட்டங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கங்கள், சம்மேளனங்கள் நடத்தும் மாநில, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் 25,000 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் போட்டிகளின் போது ஏற்படும் விபத்துகளினால் உண்டாகும் உடற்காயங்கள், உயிரிழப்பினை ஈடுசெய்து உதவிடும் வகையில் விளையாட்டு வீரர்களுக்கு 5 இலட்சம் ரூபாய்க்கான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பீச் வாலிபால் வீராங்கனைகள் செல்வி எஸ். பவித்ரா, செல்வி கே. தீபிகா, பாரா டேபிள் டென்னிஸ் வீராங்கனை செல்வி ஆர். தீபிகா ராணி ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவக் காப்பீட்டு ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில், டிராக் சைக்கிள் வீரர் திரு. பி. பிரதீப் அவர்களுக்கு 3.50 இலட்சம் ரூபாய்க்கான டிராக் சைக்கிள், கேரம் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்காக வீராங்கனைச் செல்வி. எம். காசிமா, வீரர் திரு. அப்துல் ஆசிப் ஆகியோருக்குத் தலா 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள், மாற்றுத்திறனாளி தடகள விளையாட்டு வீரர் திரு. கே. முத்துராஜா, வீராங்கனைகள் செல்வி டி. சசிகலா, செல்வி கீர்த்திகா ஆகியோருக்குத் தலா 1.65 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, "தமிழுக்கு வணக்கம்" பாடல், நடன நிகழ்ச்சி,

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 குறித்த காணொலி, முதலமைச்சர் கோப்பை பாடல் இசை நிகழ்ச்சி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இதில் முதலமைச்சர் கோப்பை பாடல் இசை நிகழ்ச்சியில் வயது முதிர்ந்தவர்களும் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

இந்த ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பையில் பங்கேற்று, பல்வேறு வெற்றியிடங்களைப் பெற்று, பரிசுகளைப் பெறக்கூடிய அத்தனை விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் முதலில் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

இத்தனை இளைஞர்களைத் திறமையாளர்களை அடையாளம் காண உழைத்த, உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

The Young and Energetic அமைச்சரிடம் இளைஞர்களின் நலனையும், விளையாட்டுத் துறையின் எதிர்காலத்தையும் ஒப்படைத்தால், அது எப்படி வெற்றிகரமாக அமையும் என்பதற்குத் தமிழ்நாடு எடுத்துக்காட்டாக ஆகியிருக்கிறது!

நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் உலக அரங்கில் வெற்றிகளைக் குவித்து, நாட்டிற்குப் பதக்கங்களும், வெற்றிக் கோப்பைகளும் பெற்றுத் தரப்போகின்ற திறமையான இளம் விளையாட்டு வீரர்களைப் பாராட்டும் இந்த விழாவை மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கும் விளையாட்டுத் துறையின் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களையும், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. மேகநாத ரெட்டி இ.ஆ.ப., அவர்களையும், அலுவலர்களையும் நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையின் 'Golden Age'-ஆக நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இருக்கிறது! National Level போட்டிகளாக இருந்தாலும், International Tournamentகளாக இருந்தாலும், High Quality-ல் Host செய்யும் இடமாக, நம்முடைய தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது!

நம்முடைய தமிழ்நாட்டு Players ஒவ்வொருவரும், நாங்கள் சாம்பியன்ஸ் என்று வெற்றி மேல் வெற்றிகளைக் குவித்துக்கொண்டு இருக்கிறார்கள்! இதற்குக் காரணமான நம்முடைய பயிற்சியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டை வளர்க்க, திறமையான வீரர்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்க, உரிய அங்கீகாரம் வழங்க, 37 கோடி ரூபாய் பரிசுத் தொகையுடன் இந்த "முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகளை நடத்தியிருக்கிறோம்!

தம்பி உதயநிதி அவர்கள் எடுத்துச் சொன்னது போல, கடந்த நான்கு ஆண்டுகளில், நம்முடைய தமிழ்நாடு, அனைத்துத் துறைகளிலும் எப்படிப்பட்ட உயரங்களை அடைந்து இருக்கிறது என்று இளைஞர்களான உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்! அதனால்தான், நாட்டிலேயே பொருளாதாரத்தில் எந்த மாநிலமும் சாதிக்காத டபுள் டிஜிட் வளர்ச்சியை நாம் சாத்தியப்படுத்தியிருக்கிறோம்!

இந்தச் சாதனைப் பயணம் விளையாட்டுத் துறையிலும் எதிரொலிக்கிறது! தொடர்ந்து எதிரொலிக்கும்! திறமையாளர்கள் எங்கு இருந்தாலும் அடையாளம் கண்டு, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நினைக்கிறோம்! அதனால்தான், பள்ளி, கல்லூரி மாணவர்கள் - மாற்றுத் திறனாளிகள் - பொதுமக்கள் - அரசு ஊழியர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்வது போன்று, CM Trophy-யை Design செய்தோம்!

இந்த CM Trophy-இன் கடந்த ஆண்டு வெற்றியைப் பார்த்து 16 இலட்சத்து 28 ஆயிரத்து 338 பேர் இந்த ஆண்டு பங்கேற்க ஆன்லைனில் ரெஜிஸ்டர் செய்திருந்தார்கள்! ஐந்து பிரிவுகளின்கீழ் நடந்த 38 போட்டிகளில் மாவட்ட - மண்டல அளவை எல்லாம் கடந்து, 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் ஸ்டேட் லெவலில் கலந்துகொண்டார்கள்! இவர்களில், தனிநபர் பிரிவில் முதல் மூன்று இடங்கள் பிடித்த வெற்றியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் - 75 ஆயிரம் ரூபாய் - 50 ஆயிரம் ரூபாயும் - டீம் ஸ்போர்ட்ஸில் அணியில் இருக்கும் எல்லோருக்கும் 75 ஆயிரம் ரூபாய் - 50 ஆயிரம்

ரூபாய் – 25 ஆயிரம் ரூபாயும் பரிசுத்தொகையாக வழங்குகிறோம்!

அதுமட்டுமல்ல, இத்துடன் கல்வி உதவித்தொகை – அங்கீகாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல நன்மைகளையும் வழங்குகிறோம்! இந்த ஆண்டு, முதன்முறையாக இ-ஸ்போர்ட்ஸும் நடத்தியிருக்கிறோம்! அனைத்துப் போட்டிகளும் கேம்ஸ் மேனேஜ்மெண்ட் சிஸ்டம் மூலமாக வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட்டிருக்கிறது! அனைத்து அப்டேட்களையும் – ஸ்கோரையும் – "Whatsapp ChatBot" மூலமாகத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருந்தோம்! இப்படி நிறைய செய்திருக்கிறோம்!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் ஐந்து ஆண்டு காலத்தில், விளையாட்டுத் துறை உட்கட்டமைப்புக்காக, 170 கோடியே 33 இலட்சம் ரூபாய்தான் நிதி ஒதுக்கப்பட்டது! ஆனால், நாம் ஆட்சிக்கு வந்த இந்த நான்கு ஆண்டுகளில், 601 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம்! ஒட்டுமொத்தமாக, விளையாட்டுத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி எவ்வளவு தெரியுமா? ஆயிரத்து 945 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம்! அதனால்தான், நம்முடைய திராவிட மாடல் அரசை, விளையாட்டுத் துறைக்கான 'கோல்டன் ஏஜ்'- என்று சொன்னேன்! இந்த நிலையில், விளையாட்டு வீரர்களின் கனவுகளுக்குச் சிறகுகள் வழங்க தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி, இதுவரைக்கும் 1,369 வீரர் – வீராங்கனைகளுக்கு, 25 கோடி ரூபாய்க்கு உதவிகளை வழங்கியிருக்கிறோம்!

இந்த வீரர்கள் தேசிய, பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்று 350-க்கும் மேற்பட்ட பதக்கங்கள் பெற்று, தமிழ்நாட்டிற்குப் புகழ் தேடித் தந்திருக்கிறார்கள்!

அதேபோல், தேசிய, பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள 5 ஆயிரத்து 393 விளையாட்டு வீரர், வீராங்கனைகள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 172 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது! விளையாட்டு வீரர்களுக்கு என்னென்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற சிலவற்றை மட்டும் Highlight-ஆக சொல்கிறேன்...

'எலைட்' விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு

உதவித்தொகையை 25 இலட்சத்தில் இருந்து, 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்!

17 விளையாட்டு வீரர்களுக்கு ஒரு கோடியே 19 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது!

"பாராலிம்பிக்-2024" போட்டிகளில் பதக்கங்கள் வென்ற நான்கு விளையாட்டு வீரர்களுக்கு ஐந்து கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இதுமட்டுமல்ல. 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று அறிவித்து, தலா மூன்று கோடி ரூபாய் செலவில், இதுவரைக்கும் 75 தொகுதிகளில், விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன!

தலைவர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாட்டில் இருக்கும் 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கும் - 16 ஆயிரத்து 798 விளையாட்டு உபகரண தொகுப்புகள் வழங்கியிருக்கிறோம்!

அதேபோல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், விளையாட்டு உபகரண தொகுப்புகள் வழங்குகிறோம்.

சென்னை – திருச்சி – மதுரை – நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடெமிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன!

நான் சொல்வதெல்லாம் கொஞ்சம்தான்! விளையாட்டுத் துறைக்கான சாதனைகளைப் பட்டியலிட்டுச் சொன்னால் இன்றைக்கு முழுவதும் சொல்ல வேண்டியதாக இருக்கும்!

நம்முடைய தமிழ்நாடு போன்று, வேறு எந்த மாநிலமும் விளையாட்டுகளுக்கும் - விளையாட்டு வீரர்களுக்கும் உதவிகள் செய்திருக்க மாட்டார்கள் என்று பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன். இந்த உழைப்பால், நம்முடைய தமிழ்நாடு பெற்றிருக்கக்கூடிய சில அவார்ட்ஸ் மட்டும் சொல்கிறேன்...

CII அமைப்பு சார்பில், SDAT-க்கு "விளையாட்டு வணிக விருது-2023" வழங்கப்பட்டது!

இரண்டு ஆண்டுகளுக்கு 'தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார் ஏசஸ் விருதுகள்' வழங்கப்பட்டிருக்கின்றன!

'ஜெம் அவார்ட்ஸ் 2025' வழங்கப்பட்டிருக்கிறது!

நம்முடைய செஸ் சாம்பியன் குகேஷுக்கு கேல் ரத்னா விருது கிடைத்திருக்கிறது!

2024-ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருது, நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு வீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது!

நம்முடைய துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் வரவேற்புரையில் சொன்னாரே அந்த விருதுகள்!

இப்படி எத்தனை விருதுகள் தமிழ்நாட்டைத் தேடி வந்தாலும், நாங்கள் பெரிதாக நினைக்கின்ற விருது எது தெரியுமா? "தமிழ்நாட்டில் ஸ்போர்ட்ஸை கரியராக (Career) எடுத்தால், நிச்சயம் நம்மால் சாதிக்க முடியும் என்று நம்முடைய அரசின் திட்டங்கள் மீதும் முன்னெடுப்புகள் மீதும் நம்பிக்கை வைத்து இத்தனை ஆயிரம் பேர், இந்தப் போட்டிகளில் பங்கெடுக்கிறீர்களே – உங்களின் இந்த நம்பிக்கைதான் எங்களுக்கான பெரிய விருதாக அமைந்திருக்கிறது!

அண்மையில், இதே நேரு உள்விளையாட்டரங்கத்தில் கல்வியால் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித் தரும் மாணவர்களைப் பாராட்ட "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என்ற நிகழ்ச்சியை நடத்தினோம்! அப்போது, கல்வியால் சிறந்த மாணவர்கள் மட்டுமல்ல, விளையாட்டால் உயர்ந்த இளைஞர்களும் தங்களின் அனுபவங்களை, சாதனைப் பயணத்தைப் பகிர்ந்து கொண்டார்கள்!

காது கேளாதோருக்கான ஒலிம்பிக்ஸில், மூன்று தங்கப் பதக்கங்களை வென்ற 2022-இல் அர்ஜுனா விருதுபெற்ற ஜெர்லின் அனிகா அவர்களின் தந்தை, தமிழ்நாடு அரசு அவர்களின் வெற்றிப் பயணத்திற்கு எந்தளவிற்குத் துணை நின்றது என்று உருக்கமாகப் பேசினார்கள்!

அதேபோன்று, 'போல் வால்ட்' விளையாட்டில் தேசிய அளவில் தொடர்ந்து சாதனை படைத்த, ரோசி மீனா பால்ராஜ் என்ற வீராங்கனை ஒரு 'போல்' வாங்க ஒன்றரை இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற அந்த எளிய பின்னணியிலிருந்து வந்த தன்னிடம் அவ்வளவு காசு இல்லையே, என்று சொன்ன நேரத்தில் நம்முடைய அரசுதான் அனைத்து சப்போர்ட்டும் செய்தது. இப்போது தன்னிடம் ஆறு 'போல்' இருப்பதோடு, இரயில்வே துறையில் தனக்குத் தரப்பட்ட வேலையைவிட, மூன்று மடங்கு சம்பளத்துடன் தமிழ்நாடு அரசு வேலை வழங்கியிருக்கிறது என்று பெருமையோடு சொன்னார்.

அடுத்து, சென்னை காசிமேட்டைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரின் மகளான கேரம் வீராங்கனை காசிமா அவர்கள் என்ன பேசினார் என்று உங்களுக்கே தெரியும்! அமெரிக்காவில் உலகக் கோப்பைப் போட்டியில், 3 தங்கப் பதக்கங்களை வென்ற அவருக்கு ஒரு கோடி ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கியது நம்முடைய திராவிட மாடல் அரசு!

இப்படி, நம்மைப் பொறுத்தவரை, ஜெர்லின், ரோசி மீனா, காசிமா போன்ற எளியவர்களின் வெற்றிதான், நம்முடைய அரசின் வெற்றி! அதற்காகதான், பல்வேறு திட்டங்களின் மூலமாக எத்தனையோ ஏழை வீரர்களின் கனவை தமிழ்நாடு விளையாட்டுத் துறை இன்றைக்கு நிறைவேற்றி வருகிறது. அவர்களும் உலகளவில் சாதித்து, அவர்கள் மீது நம்முடைய அரசு வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன ஒரு விஷயம் என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது! நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, ஏராளமான பணிகளை, முன்னெடுப்புகளை நாள்தோறும் செய்வதைப் பார்த்து, ஒரு விழாவில் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், என்னுடைய துறையில் செய்யப்பட்டு வந்த சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசி, "நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது என்று சொன்னார்! இன்றைக்கு அதே ஏக்கம் எனக்கும் வந்திருக்கிறது! நானே விளையாட்டுத் துறையையும் கவனித்திருக்கலாமோ என்று இப்போது தோன்றுகிறது! காரணம் உதயநிதியின் பணிகள் அப்படி இருக்கின்றன! உதயநிதியின் பணிகள் இன்னும் இன்னும் சிறக்க வேண்டும்; தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் இன்னும் இன்னும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்று நான் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன்!

இங்கிருக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் - வீராங்கனைகளுக்கும் நான் சொல்லிக்கொள்வது "உங்களுக்கான அத்தனை வாய்ப்புகளையும் நாங்கள் நிச்சயம் உருவாக்கித் தருவோம்; நீங்கள் விளையாட்டில் கவனம் செலுத்தி முறையாகப் பயிற்சி செய்து, உங்கள் திறமையால் நம்முடைய தமிழ்நாட்டிற்கும், இந்திய நாட்டிற்கும் பெருமை சேருங்கள்! உங்களுடையத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு

முதலமைச்சராக நானும் இருக்கிறேன்; உங்கள் துறையின் அமைச்சரான துணை முதலமைச்சர் உதயநிதியும் இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் உங்கள் சாதனைப் பயணம் தொடர என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, களம் நமதே! வெற்றி நமதே!

நன்றி! வணக்கம்!

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 பரிசளிப்பு விழாவில் உங்களையெல்லாம் வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்நாடு விளையாட்டுத்துறையில் நம்பர் 1 இடத்தை அடையவேண்டும் என்றுதான், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விளையாட்டுத் துறைக்கென்று ஒரு தனி அமைச்சகத்தை முதன் முதலாக அமைத்தார். கலைஞர் அவர்களின் லட்சியத்தை நிறைவேற்றும் வகையில், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, விளையாட்டிலும் நம்பர் 1 என்ற இடத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. அதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டுத்தான், இங்கே நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு மிகப்பெரும் விளையாட்டுப் புரட்சியை, ஒரு மாபெரும் இயக்கமாகவே மாற்றிக் காட்டிக் கொண்டிருக்கிறது. இந்தப் போட்டியை சிறப்பாக நடத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்காக 84 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தார்கள். குறிப்பாக, பரிசுத்தொகையாக 37 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி கொடுத்தார்கள். அதற்கு விளையாட்டு வீரர்களின் சார்பாக, துறையின் சார்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, எங்களுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2023-ஆம் ஆண்டு, இதே முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு முழுவதும் சுமார் 4 இலட்சம் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றார்கள். ஆனால், இன்றைக்கு 2025ஆம் ஆண்டு சுமார் 16 இலட்சம் இளைஞர்கள் நம்முடைய முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்கள். இதிலிருந்து இந்தப் போட்டிகளுக்கான வரவேற்பையும், எதிர்பார்ப்பையும், நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்ற நோக்கமே, தமிழ்நாடு முழுவதும் வெளியில் தெரியாமல் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களின் திறமையை வெளியே கொண்டு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய ஒரே இலட்சியம்.

தமிழ்நாட்டில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களைத் தேசிய, சர்வதேச போட்டிகளுக்கு அனுப்புகின்ற ஒரு launching pad தான், நம்முடைய முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025.

இந்த மேடையில் உங்கள் முன்பு 2 முக்கியமான வீரர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். திருநெல்வேலியைச் சேர்ந்த தம்பி பெனடிக்சன் ரோகித் அவர்கள் இன்றைக்கு நீச்சல் போட்டியில் சர்வதேச அளவில் வெற்றியைத் தொடர்ந்து குவித்துக்கொண்டு வருகிறார். இப்போதுகூட ஆண்கள் 100 மீட்டர் பட்டர்பிளை (Men's 100-meter butterfly) நீச்சல் பிரிவில் நம்முடைய சகோதரர் பெனடிக்சன் ரோகித் அவர்கள் 52.5 வினாடிகளில் நீந்தி இன்றைக்குத் தேசிய சாதனை (national record) படைத்திருக்கிறார். அடுத்து வருகின்ற, ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக மிகக் கடினமாகப் பயிற்சி எடுத்து வரும், ரோகித் அவர்களுக்கு நாம் அத்தனைபேரும் நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

அதே மாதிரி, அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தைச் சேர்ந்த தங்கை ஷர்வானிகா இங்கே நம்மோடு உட்கார்ந்திருக்கிறார். சதுரங்கப் போட்டியில் இன்றைக்கு இந்தியாவே பெருமைப்படும் அளவிற்கு வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு வீராங்கனைதான் ஷர்வானிகா. அவங்களுடைய வயது கூட இன்னும் 10 வயது ஆகவில்லை. ஆனால், கிட்டத்தட்ட 10 தேசிய, சர்வதேசப் பதக்கங்களை ஏற்கெனவே வென்று காட்டியுள்ளார்கள். இது ஷர்வானிகாவுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பெருமை என்பதை விட, it is a proud moment for Indian Chess, குறிப்பாகத் தமிழ்நாடு Chess விளையாட்டுக்கு இது பெருமையான தருணம் என்று சொல்லலாம்.

ரோகித், ஷர்வானிகா மாதிரி, இன்னும் பல நூறு வீரர்கள் உங்களில் இருந்து வருவார்கள் என்ற நம்பிக்கை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதற்காகத்தான், தமிழ்நாடு சாம்பியன்ஸ் ட்ரவுண்டேசன், உயரிய ஊக்கத்தொகை என அனைத்து வகையிலும், நம்முடைய அரசு உங்களுக்குத் துணை நிற்கின்றது. இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு நீங்கள் உங்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் என்றால், பயிற்சியும், மன உறுதியும் இருந்தால், நீங்கள் நிச்சயம் சாதித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கின்றது. உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார்.

இந்த விழாவிற்குத் தலைமையேற்றுள்ள திராவிட மாடல் நாயகர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விழாவிற்கு வருக, வருக என்று வரவேற்கிறேன்.

செஸ் வீராங்கனை சகோதரி ஷர்வானிகா அவர்களையும், நீச்சல் வீரர் பெனடிக்சன் ரோகித் அவர்களையும்வருக,வருகஎனவரவேற்கின்றேன்.

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் சேகர்பாபு உள்ளிட்ட அனைத்துஅமைச்சர்பெருமக்களையும், மாண்புமிகு மேயர் சகோதரி பிரியா, துணைமேயர் அண்ணன் மகேஷ்குமார் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளையும், அண்ணன் தயாநிதி மாறன், அண்ணன் பரந்தாமன் உள்ளிட்ட அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., அவர்களையும்,

பெருநகர சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், ஐ.ஏ.எஸ்., அவர்களையும்,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினுடைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, ஐ.ஏ.எஸ்., அவர்களையும்,

முதல் மூன்று இடங்களை வென்றுள்ள மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்கள்

திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, ஐ.ஏ.எஸ்., அவர்களையும், திருமதி தி. ஸ்நேகா, ஐ.ஏ.எஸ்., அவர்களையும், திரு. பவன்குமார், ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட வந்திருக்கக்கூடிய அனைத்து அரசு அதிகாரிகளையும், காவல்துறை அதிகாரிகளையும்,

விளையாட்டுத்துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்ற வீரர்கள், வீராங்கனைகள் உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கின்றேன்.

மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிருவாகக் குழுவில் இடம்பெற்றுள்ள இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கின்றேன்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து வருகை தந்து, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகச்சிறப்பாக நடத்திய அனைத்து அதிகாரிகள், நடுவர்கள், தன்னார்வலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் பயனாளிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

I warmly welcome the representative of various considers to this very prestigious event.

அதேபோல என்னுடைய மனதுக்கு என்றும் நெருக்கமான நம்முடைய, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விடுதி மாணவர்கள், மாணவிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கின்றேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த, கிட்டத்தட்ட 1,300 கிலோமீட்டர் தூரம் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்திய தங்கை நிவேதா ஜெசிகா உள்ளிட்ட, மெட்ராஸ் மோட்டார் கிளப்பைச் (Madras Motor Club) சேர்ந்த சகோதரிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இங்கே கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்ற இருக்கக்கூடிய கலைஞர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வந்திருக்கக்கூடிய கழக நிருவாகிகளையும், பத்திரிக்கை நண்பர்களையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து வெல்லட்டும். களம் நமதே!

நன்றி! வணக்கம்!

படமும்/செய்தியும்

சென்னை, கொளத்தூரில் இந்தியாவிலேயே முதன்முறையாக சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள வண்ணன மீன் வர்த்தக மையம் திறப்பு-11.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.10.2025 அன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், 53 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலேயே முதன்முறையாகச் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ள கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையத்தைத் திறந்து வைத்தார்.

“உலகப் புத்தொழில் மாநாடு 2025”

புத்தொழில் சூழலை வலுப்படுத்த ரூ.100 கோடியில், “இணை உருவாக்க நிதியம்” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.10.2025 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைச் சார்ந்த தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில் “உலகப் புத்தொழில் மாநாடு 2025”-யைத் தொடங்கி வைத்து, தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை-2025 (Tamil Nadu Startup EcoSystem Report 2025), தமிழ்நாடு புத்தொழில் தொடக்க தொலைநோக்கு அறிக்கை-2035 முக்கிய அம்சங்கள் (Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu) அறிக்கைகளை வெளியிட்டு, தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைத் தொகுப்பு, மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்குப் புத்தொழில் நிதித்திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்-09.10.2025

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கம், பிரான்ஸ், கனடா, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

“உலகப் புத்தொழில் மாநாடு 2025” தொடங்கி வைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ்ச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கத்தின்

சார்பில், கோயம்புத்தூர், கொடிசியா வர்த்தக வளாகத்தில், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலை உலகத் தரத்தில் மேம்படுத்தும் முயற்சியாகவும், தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள், புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களுக்குப் பன்னாட்டு இணைப்புகளை ஏற்படுத்தும் வகையிலும் 9.10.2025, 10.10.2025 ஆகிய இரண்டு நாட்கள் "உலகப் புத்தொழில் மாநாடு 2025" நடைபெறுகிறது.

தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை, தொலைநோக்கு அறிக்கை (Vision) 2035 – வெளியிடுதல்

அதனைத் தொடர்ந்து, Inc42 நிறுவனம் தயாரித்த "தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை-2025" (Tamil Nadu Startup EcoSystem Report 2025), ஸ்டார்ட் அப் ஜீனோம் அமைப்பு தயாரித்துள்ள தமிழ்நாடு புத்தொழில் தொடக்க தொலைநோக்கு அறிக்கை-2035 முக்கிய அம்சங்கள் (Highlights of Startup Vision Report 2035 for Tamil Nadu) என்ற தொலைநோக்கு அறிக்கைகளின் முதல் நிலை செயல்திட்ட வரைவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

தமிழ்நாட்டுப் புத்தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைத் தொகுப்பு வழங்குதல்

பெல்ஜியம் தூதர் திரு.டிடியர் வாண்டர்ஹாஸெல்ட் (Mr. Didier Vanderhasselt) அவர்களால் "Hub.Brussels – My Welcome Package Award" எனும் சலுகைத்தொகுப்பினை இரண்டு தமிழ்நாட்டுப் புத்தொழில் நிறுவனங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

புத்தொழில் நிதித்திட்டத்தின்கீழ் நிதி வழங்குதல்

மாற்றுத்திறனாளிகளால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான – 1) மனிதவள மேலாண்மைத் துறையில் இயங்கும் Warpe academy private limited 2) மின்னணுவியல் துறையில் இயங்கும் ediode electronics private limited 3) ஆடை விற்பனைத் துறையில் இயங்கும் letsbuysarees நிறுவனம், 4) மதிப்புக் கூட்டப்பட்ட சிறுதானிய உணவுப்பொருட்கள் தயாரிக்கும் humart நிறுவனம், மூன்றாம் பாலினத்தவர்களால் நிறுவப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களான – 1) நவீனத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கும் Evolvance 2) விவசாயத்துக்குத் தேவையான தானியங்கி இயந்திரங்கள் சேவை அளிக்கும் சிவானி ட்ரோன் சர்வீசஸ் நிறுவனம் 3) ஆடை வடிவமைப்புத் துறை சார்ந்த kals apparel 4) உணவு விற்பனைத் துறையில் இயங்கும் princess of Trichy refreshments நிறுவனம் ஆகிய எட்டு நிறுவனங்களுக்குப் புத்தொழில் நிதித்திட்டத்தின்கீழ், தலா 5 இலட்சம் ரூபாய், என மொத்தம் 40 இலட்சம் ரூபாய்க்கான முழு மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கம், பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத்தரத்திலான தொழில்

வளர்பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றிற்காக, தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கம் பிரான்சு நாட்டின் Link Innovations, பிலிப்பைன்ஸ் நாட்டின் Techshake, ஜெர்மனி நாட்டின் Asia Berlin உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தொழில் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகள்

இம்மாநாட்டில், தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள், நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் (D2C) பெண் தொழில்முனைவோர்களின் புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்களின் புத்தாக்க முயற்சிகள், விண்வெளித் தொழில்நுட்பத் துறை புத்தொழில் நிறுவனங்கள், மேம்பட்ட உற்பத்தித் துறை சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் எனப் பல்வேறு நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப், பார்வையிட்டார். மேலும், தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களுக்குப் பன்னாட்டுச் சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 21 நாடுகள் பங்கேற்ற பன்னாட்டு அரங்குகளும் இதில் அமைக்கப்பட்டுள்ளன. ■

படமும் / செய்தியும்

கோயம்புத்தூரில் ரூ.1,791 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள "ஜி.டி.நாயுடு மேம்பாலம்" திறப்பு – 09.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.10.2025 அன்று நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர், கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 1,791 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மிக நீளமான 10.10 கிலோ மீட்டர் நீளம் கொண்ட நான்கு வழித்தட மேம்பாலத்திற்கு "ஜி.டி. நாயுடு மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்பட்டுப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

சென்னை, மதுரையில் திருநங்கையர்களுக்கான அரண் இல்லங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் - 13.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் சென்னை – செனாய் நகர், மதுரை மாநகர் – அண்ணா நகர் ஆகிய இடங்களில் 43.88 இலட்சம் ரூபாய் செலவிலான "அரண்" திருநங்கையர்களுக்கான இல்லத்தினைத் திறந்து வைத்தார்.

திருநங்கையர்களின் நலன் காத்திட தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள்

சமூகத்தில் திருநங்கையர்கள் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்குடன், மரபு சார்ந்த "அரவாணிகள்" என்ற சொல்லுக்கு மாற்றாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "திருநங்கை" என்ற மரியாதைக்குரிய சொல் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

திருநங்கைகளுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பையும் அங்கீகாரத்தையும் வழங்கி, அவர்களின் உழைப்பையும், பங்களிப்பையும் அங்கீகரிக்கும் விதமாக, 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று தமிழ்நாட்டில் "நல வாரியம்" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தை அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

திருநங்கையர்களின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்காக, தமிழ்நாடு அரசு திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாகத் திருநங்கை அடையாள அட்டைகள் வழங்குதல், ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,500 ஓய்வூதியம் வழங்குதல், குடும்ப அட்டை, வீட்டு மனைப்பட்டா, மருத்துவக் காப்பீடு வழங்குதல், தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடக்க மானியம் வழங்குதல், சுயஉதவிக்குழு அமைத்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல், அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லா "விடியல் பயணம்" "திருநங்கைகளுக்கான உயர்கல்வித் திட்டம்" மூலம் உயர்கல்வி பயிலும் திருநங்கைகளின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்வதோடு, புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதம் ரூ.1,000 கல்வி ஊக்கத்தொகை, உயர்கல்வி பயிலும் அனைத்து திருநங்கைகளுக்கும் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

'அரண்' இல்லங்கள் - திருநங்கையருக்குப் பாதுகாப்பான மற்றும் ஆதரவான வாழ்விடங்கள்

திருநங்கைகள் நலன் காத்திடும் தொடர் நடவடிக்கைகளின் அடுத்தபடியாக, திருநங்கைகள் எதிர்நோக்கும் சமூக, மனநலம், பாதுகாப்புச் சார்ந்த சவால்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான, மதிப்பும், மரியாதையும் நிறைந்த,

ஆதரவான வாழ்விடச் சூழலை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு அரசு "அரண் இல்லம்" எனப்படும் சிறப்பு மையங்களை நிறுவத் தீர்மானித்து, முதற்கட்டமாக, சென்னை – செனாய் நகர், மதுரை மாநகர் – அண்ணா நகர் ஆகிய இடங்களில் 43.88 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரண் இல்லங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரண் இல்லத்திற்கான தேவை

பாலினம் அடையாளம் காணும் பருவத்தில், பயம், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு, குடும்பம், கல்வியில் இருந்து விலகி, ஆதரவற்று நகரங்களுக்கு வரும் திருநங்கை / திருநம்பி / இடைபாலினரைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும் இது அவசியமாகிறது.

முக்கிய நோக்கங்கள்

குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட திருநங்கை/திருநம்பி/இடைபாலின நபர்களுக்கு 1 வாரம் முதல் அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை பாதுகாப்பான, தற்காலிக தங்குமிடம் வழங்குதல் தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தின் அடையாள அட்டை பெற்ற எந்த மாவட்டத்தைச் சேர்ந்த நபரும் பயன்பெறுவதோடு, ஒவ்வொரு இல்லத்திலும் 25 நபர்கள் தங்க அனுமதிக்கப்படுவர்.

மேலும், இந்த இல்லங்களில், உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பள்ளி, கல்லூரியில் இடைநின்றவர்கள் கல்வியைத் தொடர உதவுதல், உயர்கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உள்ளுறைவோரின் தேவைகளுக்கேற்ப உளவியல், தொழில்முறை ஆலோசனைகள் வழங்குதல், சுயதொழில் தொடங்க வழிகாட்டுதல், நிதியுதவி வழங்குதல், திருநங்கையருக்கு எதிரான வன்முறை, பாகுபாடுகள் குறித்துப் புகார் அளிக்க உதவுதல், இலவச சட்ட உதவி மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குடும்பத்தால் நிராகரிக்கப்பட்டவர்களை மீண்டும் குடும்பத்துடன் இணைக்க முயற்சித்தல், குடும்பத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும். ■

படமும் / செய்தியும்

வீரபாண்டியக் கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள்-16.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.10.2025 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டியக் கட்டபொம்மன் அவர்களின் 226-ஆவது நினைவு நாளை முன்னிட்டுச் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள வீரபாண்டியக் கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர்கள் உடனிருந்தார்.

2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.10.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில், பல்வேறு கலைப் பிரிவுகளைச் சேர்ந்த சிறந்த கலைஞர்களுக்கு 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளையும், பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோர் பெயர்களில் கலை வித்தகர்களுக்கான அகில இந்திய விருதுகளையும், சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும், சிறந்த நாடகக்குழுவிற்குச் சுழற்கேடயத்தையும் வழங்கி சிறப்பித்தார்.

2021, 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதிற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, இயல் இசை நாட்டியம், நாடகம், திரைப்படம், சின்னத்திரை, இசை நாடகம், கிராமியக் கலைகள், இதர கலைப் பிரிவுகள் என பிரிக்கப்பட்டு, கலைமாமணி விருது பெறத் தகுதியுள்ள கலைஞர்களைத் தேர்வு செய்திட கலைப்பிரிவு வாரியாக வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவ்வல்லுநர் குழுக்களால் அளிக்கப்பட்ட தகுதியுள்ள கலைஞர்களின் பெயர் பட்டியல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இயற்றப்பட்ட தீர்மானம், பரிந்துரையை

ஏற்று 2021, 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் பெறும் விருதாளர்களின் பெயர் பட்டியல் தமிழ்நாடு அரசால் 24.09.2025 அன்று அறிவிக்கப்பட்டது.

சிறந்த கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள் வழங்குதல்

அதன்படி, 2021, 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளை ஆண்டிற்குத் தலா 30 கலைஞர்கள் வீதம், மொத்தம் 90 கலைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்ததோடு, கலைமாமணி விருதுபெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம், விருது பட்டயத்தையும் வழங்கினார்.

கலை வித்தகர்களுக்கான சிறப்பு விருதுகள் வழங்குதல்

அதனைத் தொடர்ந்து, அகில இந்திய விருது பெறும் கலை வித்தகர்களுக்கான பாரதியார் விருதினை (இயல்) முனைவர் ந. முருகேசபாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ். சுப்புலட்சுமி விருதினை (இசை) பத்மவிபூஷன் டாக்டர் கே.ஜே. யேசுதாஸ் அவர்களின் சார்பில் அவரது மகன் திரு. விஜய் யேசுதாஸ் அவர்களிடமும், திருமதி பாலசரசுவதி விருதினை (நாட்டியம்) பத்மஸ்ரீ முத்துகண்ணம்மாள் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். விருதாளர்களுக்கு விருதுடன் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலையுடன், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கத்தையும் வழங்கினார்.

சிறந்த கலை நிறுவனம், நாடகக் குழுவிற்குக் கேடயங்கள் வழங்குதல்

மேலும், சிறந்த கலை நிறுவனத்திற்கான கேடயத்தினை சென்னையிலுள்ள தமிழ் இசைச் சங்கத்திற்கும் (ராஜா அண்ணாமலை மன்றம்), சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற் கேடயத்தை மதுரை மாவட்டம் – பாலமேட்டில் உள்ள கலைமாமணி எம்.ஆர். முத்துசாமி நினைவு நாடக மன்றத்திற்கும்மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். கேடயங்களைப் பெற்ற சிறந்த கலை நிறுவனம், நாடகக் குழுவிற்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழ்நாடு 'இயல் இசை நாடக' மன்றத்தின் சார்பில், நடைபெறக்கூடிய இந்த மாபெரும் விழாவில் கலந்துகொண்டு, தலைசிறந்த கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி, பாராட்டுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் சாமிநாதன் அவர்களுக்கும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் என்னுடைய இனிய சகோதரர் திரு. வாகை சந்திரசேகர் அவர்களுக்கும், உறுப்பினர் – செயலாளர் விஜயா தாயன்பன் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த

வாழ்த்துகளையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விருது பெற்ற கலைமாமணிகள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுடைய கலையை – கலைத் தொண்டை – இத்தனை ஆண்டுகாலம் நீங்கள் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். அந்த உழைப்பை – அரசு அங்கீகரித்துப் போற்றக்கூடிய இந்தப் பாராட்டுதான் தலைசிறந்த பாராட்டு!

நம்முடைய துணை முதல்வர் தம்பி உதயநிதி எடுத்துச் சொன்னதுபோல, நம்முடைய இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் சந்திரசேகர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, 1967-இல் பேரறிஞர் அண்ணா கையால், முத்தமிழறிஞர் கலைஞர் பெற்ற இந்தக் கலைமாமணி விருதை, இன்றைக்கு நீங்களும் பெற்றிருக்கிறீர்கள்!

2021-2022-2023 ஆகிய மூன்றாண்டுகளுக்கும் சேர்த்து, பல்வேறு கலைப் பிரிவுகளில் விருதுகளை வழங்கி நானும் பெருமை அடைகிறேன்!

இயல் – இசை – நாட்டியம் – நாடகம் – திரைப்படம் – சின்னத்திரை – இசை நாடகம் – கிராமியக் கலைகள் – இதரக் கலைப் பிரிவுகள் என்று கலைத்துறையின் எந்தப் பிரிவும் விடுபட்டுவிடக் கூடாது என்று கவனத்துடன் இந்த விருதுகளை வழங்குகின்ற இயல் இசை நாடக மன்றத்துக்கு என்னுடைய மனதாரச் சிறப்புக்குரியப் பாராட்டுக்கள்!

இங்கே விருது பெற்றிருக்கின்ற பெரும்பாலானோர் எனக்கு நன்றாக அறிமுகம் ஆனவர்கள்தான்! பலருடைய கலைத்தொண்டு பற்றியும் எனக்குத் தெரியும்! மூத்த கலைஞர்களுக்கு மட்டுமல்லாமல், வளர்ந்து வரும் இளம் கலைஞர்களையும் அடையாளம் கண்டு, மிகச் சரியானவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன!

நீங்களே பார்க்கலாம்! 90 வயதான மதிப்பிற்குரிய முத்துக்கண்ணம்மாள் அவர்களும் விருது பெறுகிறார்கள்; இளம் இசை அமைப்பாளர் அனிருத் அவர்களும் விருது பெறுகிறார். அந்த வகையில், மிகச் சிறப்பான விழாவாக இந்த விழா அமைந்து இருக்கிறது.

கலைமாமணி விருது பெறும் கலைஞர்களுக்குத் தங்கப்பதக்கமும், விருது பட்டயமும் வழங்கப்பட்டிருக்கிறது! இன்றைக்கு நாட்டில் தங்கத்தின் விலை என்னவென்று உங்களுக்கே தெரியும்... ராக்கெட் வேகத்தில், ஒருநாளைக்கு இரண்டு முறை விலை ஏறிக்கொண்டு இருக்கிறது. இந்த விருது அறிவித்த அன்றைக்கு இருந்த தங்கத்தின் விலையும், இன்றைக்கு இருக்கக்கூடிய விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே புரியும்! ஆனால், அவ்வளவு மதிப்புமிக்க தங்கத்தைவிட, "கலைமாமணி" என்று புகழ் சேர்க்கும் பட்டத்திற்குத்தான் மதிப்பு அதிகம்! ஏனென்றால், இது தமிழ்நாடு தருகின்ற பட்டம்!

தொன்மையான கலைகளை வளர்த்தல் –

அந்தக் கலைஞர்களை ஊக்குவித்தல் –

அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல் –

நாடகம், நாட்டிய நாடகங்களுக்குப் புத்துயிர் அளித்தல் –

நம்முடைய பாரம்பரியக் கலைகளை வெளி மாநிலங்களுக்கும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல் –

தமிழ்க் கலைகளோடு வளர்ச்சிக்கு, அளப்பரிய பங்களிப்புச் செய்யும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல் –

நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் ஆகிய பணிகளை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மிகச்சிறப்பாகச் செய்து வருவதின் அடையாளம்தான், இந்த விழா!

அந்த வரிசையில், நம்முடைய திராவிட மாடல் அரசும் முத்தமிழ்க் கலைஞர்களைப் போற்றி வருகிறது. அதற்குச் சில எடுத்துக்காட்டுகளைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் என்று நிதி உதவியை உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

தமிழ்நாடு இயல் – இசை – நாடக மன்றத்துக்கு, ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியை, 3 கோடி ரூபாயில் இருந்து ரூ.4 கோடியாக உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள், கலைப்பொருட்கள் வாங்குவதற்கு ஆண்டுதோறும் 500 கலைஞர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

நலிந்த நிலையில், வாழுகின்ற கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயில் இருந்து உயர்த்தி, இப்போது ஒரு இலட்சம் ரூபாயாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

பொங்கல் கலை விழாவை அடிப்படையாக வைத்து "இசைச் சங்கமம்", "கலைச் சங்கமம்" கலை நிகழ்ச்சிகள், 38 மாவட்டங்களிலும் நடத்துவதற்கு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபெற்றுப் பயன் பெற்றிருக்கிறார்கள்.

கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்கள் – அரசுப் பேருந்துகளில், கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்று அறிவித்திருக்கிறோம்.

புகழ்பெற்ற – மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு, குடும்பப் பராமரிப்பு நிதியுதவி 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழில், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட, நூலாசிரியர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில், தமிழ்க் கலைகளைக் கொண்டுசெல்லும் மகத்தான முன்னெடுப்பையும் செய்து கொண்டிருக்கிறோம்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வரலாற்று நாடக விழா, நாட்டிய விழா, கிராமியக் கலை விழா, பழங்குடியினர் கலை விழா போன்ற கலைத் திருவிழாக்களை எல்லாம் நடத்தியிருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்களின் வழியில், கலைஞர்களைப் போற்றும் அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது! கலைஞரின் அரசு கலைகளைப் போற்றும் அரசாக, முத்தமிழைப் போற்றும் அரசாகத்தான் எப்போதும் இருக்கும்! அதற்கு மாபெரும் எடுத்துக்காட்டுதான், சிம்பொனி சிகரம் தொட்ட தமிழர் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு, திராவிட மாடல் அரசு எடுத்த மாபெரும் பாராட்டு விழா!

உலகில் எந்தக் கலைஞருக்கும், எந்த அரசாங்கமும் இப்படி ஒரு பாராட்டு விழாவை நடத்தியதில்லை என்று இசைஞானி அவர்களே குறிப்பிட்டார். "என் மீது ஏன் இவ்வளவு பாசம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று சொன்னார்.

இசைஞானி மீது நமக்கு இருப்பது கலைப் பாசம் - தமிழ்ப் பாசம் - தமிழர் என்கிற பாசம். அதனால்தான், அந்த விழாவை எடுத்தோம். இன்று உங்களுக்கும் அதே பாசத்தின் அடிப்படையில்தான், விருதுகள் வழங்குகிறோம்!

மூன்று தமிழையும் வளர்த்த இயக்கம்தான், திராவிட இயக்கம்! திராவிட இயக்கம் – மேடைத் தமிழை வளப்படுத்தியது! நாடகத் தமிழை வளர்த்து, சமூகத்தையே பண்படுத்தியது! இசைத் தமிழையும் வளர்த்தது; அது தமிழிசையாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியது! திராவிட இயக்கத்தின் வளர்ச்சியுடன் இந்தக் கலைகளும் வளர்ந்தது என்று சொல்லப்படுவதுதான் இந்த வரலாறு!

1944-ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் நாடகக் குழுவைத் தொடங்கினார். சீர்திருத்தக் கொள்கை கொண்ட நந்தனார் நாடகத்தை அரங்கேற்றினார். நாடகங்கள் மீது ஆர்வம் கொண்ட பேரறிஞர் அண்ணாதான் 'திராவிட நடிகர் கழகத்தைக்' காஞ்சிபுரத்தில் உருவாக்கினார்.

திராவிட மறுமலர்ச்சி நாடக சபை, காஞ்சி திராவிட ஆனந்த நாடக சபை, சீர்திருத்த நாடகச் சங்கம், சுயமரியாதை நாடக சபா, முத்தமிழ் நாடகச் சங்கம், தமிழ் நாடக நிலையம் ஆகிய அமைப்புகள் அடுத்தடுத்து உருவானது!

பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழறிஞர் கலைஞர், ப.கண்ணன், தில்லை வில்லாளன், ஏ.கே.வேலன், சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு, சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு, கே.ஜி.ராதாமணாளன், திருவாரூர் தங்கராசு ஆகியோர் நம்முடைய இயக்கத்தில் அதிகமான நாடகங்களை எழுதினார்கள். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நடிகவேல் எம்.ஆர்.ராதா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி, புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன்,

டி.வி.நாராயணசாமி, கே.ஆர்.சீதாராமன், டி.என்.கிருஷ்ணன், சந்திரகாந்தா, ஜி.சகுந்தலா, மனோரமா உள்ளிட்டோர் இயக்கக் கருத்துக்களை நாடகங்கள் மூலமாகத் தங்களுடைய நடிப்பு மூலமாக மக்களிடம் கொண்டு சென்றார்கள். இவர்கள் எல்லோரும் திராவிட இயக்கத்தையும் வளர்த்தார்கள்; நாடகக் கலையையும் வளர்த்தார்கள்!

இந்தக் கலைகள், தமிழை வளர்க்கும் பெரும் தொண்டைச் செய்தது – செய்து கொண்டிருக்கிறது. கருத்து – கொள்கை – பாணி – பரப்புரை ஆகிய அனைத்தையும் நாடகக் கலையில் நுழைத்தது நம்முடைய திராவிட இயக்கம்தான். எழுத்தும், பேச்சும், இலக்கியமும், கலையும், மொழியை வளர்க்கின்றது! மொழியைக் காக்கின்றது! மொழி சிதைந்தால், இனமும், பண்பாடும் சிதைந்துவிடும். நம்முடைய அடையாளமே அழிந்துவிடும்! அடையாளம் அழிந்தால், தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற தகுதியையே இழந்து விடுவோம்.

தமிழர் என்ற தகுதியையும், சுயமரியாதையையும் இழந்து, வாழ்வதில் என்ன பயன்? அதனால், கலைகளைக் காப்போம்! மொழியைக் காப்போம்! இனத்தைக் காப்போம்! அடையாளத்தைக் காப்போம்!

நம்முடைய கலைஞர்கள், இங்கே மட்டுமல்ல, உலகம் முழுவதும் சென்று கலைகளை வளர்க்க வேண்டும். தமிழ்க் கலைகளைப் பரப்பவேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளையும், உதவிகளையும் இயல் – இசை – நாடக மன்றம் செய்யவேண்டும்; அரசும் அதற்கு உறுதுணையாக இருக்கும் என்று உறுதியளித்து, விடைபெறுகிறேன்!

நன்றி, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில், இங்கே விருது பெறுகின்ற அத்தனை கலைஞர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும், கைத்தட்டல்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரைக்கும் எப்போதுமே கலைகளையும், கலைஞர்களையும் கொண்டாடுகின்ற ஒரு இயக்கம். தமிழ்நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த கலையையும்,ஒருகருவியாகப்பயன்படுத்தியவர்கள் தான், நம்முடைய திராவிட இயக்க தமிழ்நாட்டுத் தலைவர்கள். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர் நாடகத் துறையிலும், திரைத் துறையிலும் முத்திரை பதித்தவர்கள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திரைப்படங்களிலும், நாடகங்களிலும் நடித்திருக்கின்றவர்தான். இன்றைக்கும், இசையையும், நாடகங்களையும், திரைப்படங்களையும் ரசிக்கக் கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எனவே தான், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்துகின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும், அதனுடைய செயல்பாடுகளையும் தொடர்ந்து அவர் ஊக்கப்படுத்தி வருகின்றார்.

இந்தத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கும், கலைமாமணி விருதுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் இந்த அரங்கத்திற்கும் மிக, மிக நெருங்கியத் தொடர்பு உண்டு. இங்கே அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்கள் குறிப்பிட்டது போல, சங்கீத நாடக சங்கம் என்று இருந்த பெயரைத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்று மாற்றியமைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த அரங்கத்திற்குச் கலைவாணர் அரங்கம் என்று பெயர் சூட்டியதும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல், ஆரம்பத்தில், 'கலா சிகாமணி', என்ற பெயரில்தான் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் பெயர் மாற்றம் செய்து "கலைமாமணி விருது" என்று அறிவித்தார்.

1967-ஆம் ஆண்டில், கலைஞர் அவர்களே கலைமாமணி விருதிற்குச் சிறந்த வசனகர்த்தாவாக தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவர் அமைச்சர், முதலமைச்சராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தார். இந்த அரங்கத்தில் கலைஞர் அவர்களுடைய பெயரைச் சொன்னதும், அவர் எழுந்து, விருது வாங்குவதற்காக மேடைநோக்கி வந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்த விருதைக் கலைஞர் அவர்களிடம் கொடுக்காமல், விருதுக்கான பதக்கத்தைத் (Medal-ஐ) தன்னுடைய கழுத்திலே போட்டுக் கொண்டார். பிறகுதான், அந்தப் பதக்கத்தைக் கலைஞர் அவர்களின் கழுத்தில் அணிவித்தார். கலைமாமணி விருது பெறுவதால், கலைஞர் அவர்களுக்குக் கிடைத்தப் பெருமையை தனக்குக் கிடைத்த பெருமையாகக் கொண்டாடினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எழுத்தாளர், நாடக ஆசிரியர், வசன கர்த்தா, பாடலாசிரியர், அரசியல் தலைவர், முதலமைச்சர் என்று கலைஞர் அவர்களுக்கு எத்தனையே பரிணாமங்கள் இருந்தாலும், கடைசிவரைக்கும் அவருடைய அடையாளமாகக் 'கலைஞர்' என்கிற பெயர்தான் இன்று வரைக்கும் நிலைத்து நீடித்து இருக்கிறது.

இங்கே விருதுகளைப் பெறவிருக்கின்ற கலைஞர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகின்றேன். கலைமாமணி விருதை வாங்குவதால் உங்களுக்குப் பெருமை என்று சொல்வதை விட, உங்களைப் போன்ற சிறந்த கலைஞர்களைக் கொண்டிருப்பதால் நம்முடைய தமிழ்நாட்டுக்கு அது பெருமை என்பதை நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

2009ஆம் ஆண்டு, இதே கலைவாணர் அரங்கத்திலே நடந்த நிகழ்ச்சியில், கலைமாமணி விருதுகளை வழங்கிவிட்டு பேசும்போது டாக்டர் கலைஞர் அவர்கள் இதே மேடையில் பேசியிருக்கிறார், நீங்கள் தேசிய விருதுகளை வாங்கலாம், சர்வதேச விருது பெறலாம். ஆனால், எந்த விருதாக இருந்தாலும் அது ஒரு தாயின் முத்தத்திற்கு ஈடாகாது. இந்தக் கலைமாமணி விருது என்பது அந்தத் தாயின் முத்தத்திற்கு ஈடானது என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். தாயின் முத்தத்திற்கு நிகரான அந்தக் கலைமாமணி விருதைத்தான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குத் தர இருக்கின்றார்கள்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித் தொகையை, 2 ஆயிரம் ரூபாயில் இருந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த மன்றத்திற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 3 கோடி ரூபாயாக இருந்தது, நம்முடைய அரசு அமைந்த பிறகு அந்த 3 கோடி ரூபாயை வருடத்திற்கு 4 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல், ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அந்த விழாக்களில், அனைத்துக் கலைஞர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கின்ற வகையிலும், நம்முடைய கலைகளை மீட்டெடுக்கின்ற வகையிலும், இசைச் சங்கமம், கலைச் சங்கமம் எனக் கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

சமீபத்தில், தமிழில் சிறப்பான கலை நூல்களை வெளியிடுகின்ற 5 நூலாசிரியர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. எழுத்தாளர்களுக்கு வீடுகள், மறைந்த சிறந்த எழுத்தாளர்களுக்கு மணிமண்டபம் போன்றவற்றை நம்முடைய அரசு தொடர்ந்து உருவாக்கி வருகின்றது.

இங்கே வந்திருக்கக் கூடிய கலைஞர்களுக்கு தனிப்பட்ட முறையில் என்னுடைய ஒரு வேண்டுகோளை வைக்க நான் விரும்புகின்றேன். உங்களுடைய கலைகளை நீங்கள் உங்களோடு நிறுத்திக்கொள்ளாமல், அடுத்த தலைமுறைக்குக் கொண்டுபோய் சேர்க்கும் வகையில் இன்றைக்கு இருக்கக்கூடிய மாணவர்கள், இளைஞர்களுக்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

Social media-வான YouTube, Instagram, Twitter போன்ற தளங்களில் உங்களுடைய கலைகளை நீங்கள் உலகறியச் செய்ய வேண்டும். கலை என்பது வெறும் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், அது சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்களுக்கும், அக்கா விஜயா தாயன்பன் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த இந்த மன்றத்தைச் சேர்ந்த அத்தனைப் பேருக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த இயல் இசை நாடக மன்றம் என்றைக்கும் கலைஞர்களின் முன்னேற்றத்திற்கு துணை நிற்கும்.

இங்கே பல்வேறு பிரிவுகளில் கலைமாமணி விருதுகளைப் பெற்றுள்ள அத்தனை கலைஞர்களுக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்து, இந்த வாய்ப்பிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை-06.10.2025

படமும்/ செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்குக் கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணியாளர் உள்ளிட்ட தொழிற்பிரிவுகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை, சான்றிதழ்களை வழங்கினார்.

சிக்கனம் கடைப்பிடிப்போம்! சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்
உலகச் சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி - 29.10.2025

ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் "உலகச் சிக்கன நாளாகக்" கொண்டாடப்பட்டு வருகிறது. வருவாயை உயர்த்தியும், செலவுகளைக் களைந்தும் திறம்பட வாழவேண்டும் என்பதை அய்யன் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகப் பொதுமறையாம் திருக்குறளில்,

'வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை'

'வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்' என்று கூறியுள்ளார்.

பண்டைய காலங்களில் மண் உண்டியல் மூலம் சேமிக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. பாதுகாப்பற்ற அந்த முறையினின்றும் மாறி இன்று வங்கிகளிலும், அஞ்சலகங்களிலும் சேமிக்கும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. ஒவ்வொருவரும் தம்முடைய வருவாயில் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். அத்தகைய சேமிப்பும் பாதுகாப்பானதாக அமைய வேண்டும்.

ஒருவர் சேமிக்கும் தொகையானது முதுமையில் நம்பிக்கையையும், பாதுகாப்பினையும் அளிக்கிறது. சிறுகச் சிறுகச் சேமிப்பதன் மூலம் குடும்பத்திற்குத் தேவைப்படக்கூடிய அவசரச்செலவுகள் குறிப்பாக, உயர்கல்விக்கான செலவு, திருமணச் செலவு, மருத்துவச் செலவு, வீடு கட்டுதல் போன்ற இனங்களில் ஏற்படும் செலவு போன்ற அனைத்தையும் எளிதில் எதிர்கொள்ள முடிகிறது. எனவே, ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, வரவுக்குள் செலவு செய்து சிக்கனமாக வாழப் பழகிட வேண்டும்.

வாழ்க்கை சிறப்பாக அமைய அனைவரும் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்திட அருகிலுள்ள அஞ்சலகங்களில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கிட வேண்டுகிறேன்.

படமும்/செய்தியும்

காவல்துறை வீரவணக்க நாள்-21.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.10.2025 அன்று சென்னை, காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், வீரமரணம் அடைந்த காவலர் நினைவு சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தெரிந்துகொள்வோம்

இரத்ததானத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு...

★ ஒன்றிய அளவில், "தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையானது பிற மாநிலங்களுக்குத் தன்னார்வ இரத்ததானத்தில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

★ இந்த ஆண்டிற்கான தேசியத் தன்னார்வ இரத்ததான தினத்தின் கருப்பொருள் "இரத்த தானம் செய்வோம், நம்பிக்கை கொடுப்போம், ஒன்றாக இணைந்து நாம் மனித உயிர்களைக் காப்போம்" (Give Blood, Give Hope, Together We Save Lives) என்பதாகும்.

★ தமிழ்நாட்டில் மொத்தம் 101 அரசு இரத்த மையங்கள், 252 தனியார் இரத்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 415 இரத்த சேமிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றது.

★ தமிழகத்தில் இரத்தம் தேவைப்படும் அனைவருக்கும் பாதுகாப்பான, தரமான இரத்தம் உரிய நேரத்தில் கிடைத்திடும் வகையில் அதிநவீன, குளிர்சாதன வசதிகளுடன் கூடிய 32 நடமாடும் இரத்த ஊர்திகளும் மற்றும் 2 நடமாடும் இரத்ததான ஊர்திகளும் (Mobile Bus) சென்னை, மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது.

★ 2024-2025ஆம் ஆண்டு அரசு, தனியார் இரத்த மையங்கள் மூலமாக, 9.50 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

★ புதுடெல்லியிலுள்ளச் சுகாதாரப் பொது இயக்குநரகத்தால் 2024-2025ஆம் ஆண்டில், 4.50 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்க அரசு இரத்த மையங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

★ உரிமம் பெற்ற அரசு இரத்த மையங்களில், தன்னார்வ இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக, 4,354 இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டு, 4.53 இலட்ச இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு 101 விழுக்காட்டை அடைந்துள்ளது.

★ பொதுவாக மருத்துவர்கள் கூற்றின்படி நம் ஒவ்வொருவரின் உடலிலும், சுமார் 5 லிட்டர் இரத்தம் உள்ளது. இந்த இரத்ததானத்தின்போது 350 மி.லி. முதல் 450 மி.லி. இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது.

★ 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான ஆண் 3 மாதத்திற்கு ஒரு முறையும், பெண் 4 மாதத்திற்கு ஒரு முறையும் இரத்ததானம் செய்யலாம்.

★ இரத்ததானம் செய்வதால், உடலில் புதிய அணுக்கள் உருவாகி, தானம் செய்வோரின் உடல்நலனும் காக்கப்படுகிறது என்று மருத்துவர்கள் எடுத்துரைக்கின்றனர்.

★ தமிழ்நாட்டில், இரத்த மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக e-RatKosh என்ற வலைதளம் செயல்பாட்டில் உள்ளது.

★ இதில் இரத்த வகைகளின் இருப்பைத் தெரிந்துகொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள், இதனைப் பயன்படுத்தி, தங்களுக்குத் தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம்.

★ தன்னார்வ இரத்ததானத்தின் அருமையை வலியுறுத்தும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள், 'தேசிய தன்னார்வ இரத்ததான தினமாகக்' கொண்டாடப்படுகிறது.

★ மாவட்ட அளவிலான, தேசியத் தன்னார்வ இரத்ததான தின நிகழ்வில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்களின் செயல்களைப் பாராட்டி, அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவப்படுத்தப்பட்டனர்.

★ மாநில அளவிலான நிகழ்வில், ஒவ்வொரு அரசு இரத்த மையங்களிலிருந்து, அதிக இரத்ததான முகாம்கள் மூலம், அதிக இரத்த அலகுகள் சேகரிக்க உறுதுணையாக இருந்த இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரவப்படுத்தப்படுகின்றனர். அந்த வகையில் 150 அமைப்புகள், தன்னார்வலர்கள், அமைப்புகள், மையங்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

★ செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2 வரை 527 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 18,264 புதிய இரத்ததான கொடையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாயிலாகக் கடந்த 2 மாதங்களில் மட்டும் 14,847 இரத்த அலகுகள் கொடையாகப் பெறப்பட்டுள்ளன.

நவம்பர் 14: பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள்

மக்களின் இதயம் வென்றவர்...

நேரு நல்ல இதயம் படைத்தவர்; அவரிடமிருந்த அறிவாற்றல் வேறு பலரிடம் இருந்திருக்கிறது. இனியும் இருந்திடலாம்.

ஆனால், அறிவாற்றலுடன் அவருக்கு இதயம் இருந்தது. பாலைவனத்தைச் சோலைவனமாக்க, மனிதனின் கடினமான உழைப்பைக் குறைத்திட உதவும் கருவிகளைத் தொழிற்சாலைகளில் அமைக்க, நாட்டிலே புதுக்கோலம் எழுந்திடச் செய்திட அறிவாற்றல் வேண்டும். அதனைப் பெற்றிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் தானும் குழந்தையாகிவிடும் இயல்பினை, ஏழை வதைபடுவதைக் காணும்போது அவன் நிலை எண்ணிக் கண்ணீர் சிந்திடும் இரக்கத்தினை, நல் இதயத்தைப் பெற்றிருந்தார்.

மக்களுடன் கலந்து உலவிட-உரையாட-அவர் உள்ளம் அறிந்திட அவர் எப்போதும் துடித்து வந்தார்.

சிறந்த ஜனநாயகப் பண்பாடு பூத்திட வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறைகாட்டி வந்தார்.

பார் புகழ் நிலைபெற்ற பிறகும், அவருக்கு நல்ல கவிதைகளைப் படிக்க, கேட்க, இசை நுகர, நாடகம் கண்டுகளித்திட, மலைவளம் காண்பதிலே மகிழ்ச்சி பெற, மலர் மணம் நுகர, மழலைகளைக் கேட்டு இன்புற, ஓவியம் கண்டு வியந்திட, நேரம் கிடைத்தது; நினைவு இருந்தது; காரணம், அவர் மூளை பலத்தை மட்டும் காட்டி, மக்கள் வியப்படையச் செய்திட்ட தலைவர் அல்ல; தமது இதயத்தைக் காட்டி மக்களின் இதயம் வென்றவர்.

– பேரறிஞர் அண்ணா

வடகிழக்குப் பருவமழை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.10.2025 அன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்திற்கு நேரில்சென்று, வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 16.10.2025 அன்று வடகிழக்குப் பருவமழை தொடங்கியதன் காரணமாக அக்டோபர் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்களுக்குத் தமிழ்நாட்டில் பரவலான மழை பெய்தது. குறிப்பாக, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் சராசரியாக 12 மி.மீ. மழை பெய்தது.

சென்னை தலைமைச் செயலகத்தில், பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு

திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து ஆய்வு மேற்கொண்டு, ஆயத்த நிலை, மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தவும், கரையோரங்கள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களைத் தயார் நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும், மழையினால் பாதிக்கப்பட்டுள்ள திருவாரூர் மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில், நெல் கொள்முதல் பணிகளைத் தொய்வின்றி நடத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெறப்பட்டுள்ள நெல் மூட்டைகள் விரைவாகக் கிடங்குகளுக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழையையொட்டி சென்னையில் மேற்கொண்டுவரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும், மழைநீர்த் தேங்கும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அப்போது, தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் சேத விவரங்கள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையடுத்துச் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, கரையோரங்கள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேற்காணும் மாவட்டங்களில் சராசரியாக 56.61 மி.மீ மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில், மழையால் பாதிப்பு ஏற்பட்டால் மக்கள் தங்குவதற்காக முகாம்களைத் தயார் நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழையையொட்டி சென்னையில் மேற்கொண்டு வரும் முன்னேற்பாடு

நடவடிக்கைகள் குறித்தும், மழைநீர் தேங்கும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக்கொண்டார்.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மழையினால் ஏற்படும் பாதிப்புகளைச் சீர்செய்திட JCB இயந்திரங்கள், படகுகள், மோட்டார் பம்புகள், மரஅறுப்பான்கள், லாரிகள் மற்றும் 51,639 மின் கம்பங்கள், 1,849 மின் மாற்றிகள், 1,187 மின் கடத்திகள் போன்ற தேவையான அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின்போது, நெல் கொள்முதல் சேமிப்பு, நகர்வு, அரவை குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, மழையால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்முதல் பணிகளைத் தொய்வின்றி நடத்திட வேண்டும் என்றும், மழையால் நெல் மூட்டைகள் சேதம் அடையாமல் பாதுகாத்திட வேண்டும் என்றும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெறப்பட்டுள்ள நெல் மூட்டைகளைக் கிடங்குகளுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், 19.10.2025 அன்று ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக தளர்வு வழங்குமாறு தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிற்கு முன்மொழிவு அனுப்பியுள்ளதைச் சுட்டிக்காட்டி, இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சென்னை பெருநகரத்தைப் பொறுத்தவரை பெருநகரச் சென்னை மாநகராட்சி வாயிலாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கினால் மோட்டார் பம்புகள், இயந்திரங்கள் கொண்டு அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாதிக்கப்படும் மின் கம்பங்களைச் சீர் செய்திட

சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு

நடவடிக்கை எடுத்து, சீரான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் மழை தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்விற்குப் பிறகு, இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தினால் ஆரஞ்சு / சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பின்வரும் மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அதிகாரிகளைத் (Monitoring Officers) தமது மாவட்டங்களுக்கு உடனடியாகச் சென்று அங்கு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து, ஆய்வு செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.

சென்னையைப் பொறுத்தமட்டில், 15 மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி மண்டல அதிகாரிகள் தத்தமது மண்டலங்களில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகளை உடனடியாகத் தொடங்குமாறும் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.10.2025 அன்று சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடித்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சென்னை நகரின் மூன்று முக்கிய ஆற்றுப்படுகையில் ஒன்றான அடையாறு ஆறு-ஆதனூர் ஏரியில் இருந்து உருவாகி மொத்தம் 42.38 கி.மீ. நிளத்திற்குப் பயணித்து பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் அருகில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தற்போது, பெய்துவரும் கனமழைக் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரி வேகமாக நிரம்பி வருவதன் காரணமாக 24.10.2025 அன்று 945 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை சுமார் 150 மீட்டர் அகலப்படுத்த ஏற்கெனவே உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து, ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முகத்துவாரப் பகுதியில், பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை பார்வையிட்டு, கரைப்பகுதியில் தூர்வாரி அள்ளப்பட்ட மணல் குவியலை உடனடியாக அகற்றிடவும், இப்பகுதியில் கூடுதலாக இரண்டு பொக்லைன் இயந்திரங்களைப் பயன்படுத்தி, முகத்துவாரப் பகுதியினை அகலப்படுத்தி தூர் வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார்.

மேலும், அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரப் பகுதியினை மாநகராட்சி வட்டார துணை ஆணையர்

சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு

தலைமையில் நீர்வளத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கொண்டக் குழுவினை அமைத்து வடகிழக்குப் பருவமழை காலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு இரண்டு நாட்களுக்குள் விரைந்து நிறைவு செய்ய அலுவலர்களுக்கு மீண்டும் உத்தரவு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.10.2025 அன்று அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தைத் தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை மீண்டும் ஆய்வுசெய்தபோது, பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து மேற்கொண்டு இரண்டு நாட்களுக்குள் நிறைவு செய்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை சுமார் 150 மீட்டர் அகலப்படுத்த ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்த நிலையில், மீண்டும் ஆய்வு மேற்கொண்டபோது, 200 மீட்டர் அகலத்திற்கு போர்க்கால அடிப்படையில் விரைந்து தூர்வாரி அகலப்படுத்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, படிப்படியாக இயந்திரங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தற்போது 14 பொக்லைன் இயந்திரங்களும், 4 ஜேசிபி (JCB) இயந்திரங்களுடன் அடையாறு ஆற்றின் முகத்துவாரப் பகுதியில் மண் திட்டுகளை அகற்றி அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை இரண்டு நாட்களுக்குள் விரைந்து முடித்திடவும், நீர்வளத்துறை, மாநகராட்சி அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

இப்பணிகளை விரைவுப்படுத்திட, கூடுதலாகக் களப் பொறியாளர்களை ஈடுபடுத்தித் தூர்வாரி அகலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கூவம், முட்டுக்காடு, எண்ணூரில் கொசஸ்தலையாறு ஆகிய பகுதிகளில் உள்ள முகத்துவாரப் பகுதிகளையும் தூர்வாரி, அகலப்படுத்தவேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சென்னை, சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாயில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை பார்வையிட்டு ஆய்வு

வடகிழக்குப் பருவமழை

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் களப்பணிகள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்பாராத பெரும் மழையினால் வெள்ளம் ஏற்பட்டாலும், சென்னையில் நீர்தேங்காமல் இருப்பதற்காக நீர்வளத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய் அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகள், முகத்துவாரப் பகுதிகளில் தொடர்ந்து தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாகக் கடந்த ஆண்டுகளில் ஒரு சில மணி நேரங்களிலேயே அதிக அளவில் மழை பெய்தபோதும், சில மணி நேரங்களிலேயே வெள்ள நீர் வடிந்து உடனடியாகப் போக்குவரத்து நடைபெறும் நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக, தற்காலத்தில் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் ஏற்படும் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழையினால் திடீர் வெள்ளம் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ளும் வகையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளை ஆய்வு செய்து மீதமுள்ள பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 20.10.2025 அன்று, தென்சென்னைப் பகுதியில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்திப் பருவமழைக் காலத்தில் வெள்ள நீர் எளிதில் கடலில் சென்று சேரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மேம்பாடு, சீரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக, ஒக்கியம் மடுவு கால்வாயில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாகக் காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ இரயில் மேம்பாலப் பணி நடைபெற்று வரும் பகுதியில் மடுவின் கரைகளை அகலப்படுத்திச் சீரமைக்கும் பணியினால் நீர் தடையின்றிச் செல்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, ஒக்கியம் மடுவு கால்வாயில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாகப் பள்ளிக்கரணை

சென்னை, மேடவாக்கம் சந்திப்பு பகுதியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு

சதுப்பு நிலப்பகுதிகளில் இருந்து வெளியேறும் நீர் எளிதாக கடலுக்கு செல்லும் வகையில், கண்ணகி நகர் பகுதியில் தூர்வாரும் பணிகளையும், நீர் தடையின்றி செல்வதையும் மடுவின் வலதுபுறக் கரையில் தனியார் கல்லூரிப் பகுதியில் இருந்து, பார்வையிட்டார்.

மேலும், ஒக்கிய மடுவு காரப்பாக்கம் பாலத்தின் கீழ்ப்புறம் தூர்வாரும் பணிகளையும், மற்றுமொரு தனியார் கல்லூரிக்குச் செல்லும் வழியில் வலதுபுற கரையை அகலப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டார். அப்பகுதியில் மணல் திட்டுக்களை அகற்றும் பணிகளையும், கண்ணகி நகர் பகுதியில் இடதுபுறக் கரையையும், தடுப்புச்சுவர் கட்டும் பணிகளையும் பார்வையிட்டு, சீரமைப்பு, கட்டமைப்புப் பணிகளை விரைந்து முடிக்குமாறு நீர்வளத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாகச் செல்வதற்காக, மேடவாக்கம், சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தைப் பார்வையிட்டதுடன், மழைக்காலத்தில் வெள்ள நீர் தடையின்றி எளிதில் செல்லும் வகையில் பழைய பாலத்தை விரைவாக இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி வெங்கட்ரங்கம் தெருவில் செயல்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள மையச்சமையல்கூடம்,தற்காலிகநிவாரண மையம் ஆகியவற்றில் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து 22.10.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மையச் சமையல் கூடத்தில் உணவு தயாரிக்கத் தேவையான கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதையும், சிந்தாதிரிப்பேட்டை மேற்குக் கூவம் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் பொதுமக்கள் தங்குவதற்குத் தேவையான பாய், தலையணை உள்ளிட்டவை தயாராக இருப்பதையும், அடிப்படை வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாசாலை – ஜி.பி.சாலை சந்திப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பெய்யும் கனமழையைப் பொதுமக்கள் எதிர்கொள்ளத் தேவையான உதவிகளையும், பணிகளையும் அர்ப்பணிப்பு

சென்னை, தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கேப்டன் காட்டன் கால்வாயில் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு

உணர்வுடன் மேற்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட குளம், கால்வாய்களில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 27.10.2025 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலம் வியாசர்பாடி பகுதி அம்பேத்கர் கல்லூரியில் வியாசர்பாடி கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள், அது குறித்த புகைப்பட விளக்கக் காட்சியைப் பார்வையிட்டார். தொடர்ந்து வியாசர்பாடி பகுதி கேப்டன் காட்டன் கால்வாயில் 6.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொக்லைன், மிதக்கும் பொக்லைன் இயந்திரம் கொண்டு நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை டான்பாஸ்கோ பள்ளி அருகில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வியாசர்பாடி பகுதி கொடுங்கையூர் கால்வாயில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் மணலி சாலையில் உள்ள லிங்க் கால்வாய் பாலம் பகுதியில் மிதக்கும் பொக்லைன் இயந்திரம் மூலமாகத் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மண்டலம் குட்செட் பகுதியில் இரயில்வேக்கு சொந்தமான 9.64 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில், ஏற்கனவே 2.51 ஏக்கர் பரப்பளவில் குளம் அமைந்திருந்தது. இதில் அதிக அளவில் மழைநீரைச் சேமிக்கும் வகையில் மாநகராட்சியின் சார்பில், மீதமிருந்த 7.13 ஏக்கர் பரப்பளவையும் சேர்த்து மொத்தமாக 9.64 ஏக்கர் பரப்பளவிற்குக் குளத்தை அகலப்படுத்தி, ஆழப்படுத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இக்குளத்தில் அதிக அளவு நீர் சேமிக்கப்பட்டுக் குளத்தினைச் சுற்றி உள்ள குடியிருப்புப் பகுதிகளில் மழை நீர்த் தேக்கம் ஏற்படுவது வெகுவாகக் குறையும். இந்தக் குளத்தின் உபரி நீர் பக்கிங்காம் கால்வாய்க்குச் செல்லும்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த குட்செட் குளம் அகலப்படுத்தி, ஆழப்படுத்திடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தூர்வாரும் பணிகளைத் தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டு அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னை, சூளைமேடு மேற்கு நமச்சிவாயபுரம் பகுதியில் விருகம்பாக்கம் கால்வாய் கூவம் ஆற்றில் சேரும் இடத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அகலப்படுத்தும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை, கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் கட்டளை, கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு நகரின் பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழையின் அளவு, கண்காணிப்பு கேமராக்கள் மூலம் சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து, மாநகராட்சிக்குட்பட்ட கல்வாய்களில் நீர்மட்டம், ஆறுகள் கடலுடன் கலக்கும் முகத்துவாரத்தில் உள்ள நிலவரம் குறித்து 24 மணி நேரமும் கண்காணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட நிலையில் 28.10.2025 அன்று அதிகாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை, கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கட்டுப்பாட்டு அறைக்கு 1913 தொலைபேசி மூலமாக வந்த புகார்கள், புகார்களின் விவரங்கள் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா என்றும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கட்டளை, கட்டுப்பாட்டு மையத்திற்குச் சமூக வலைதளங்கள் மூலமாக வரப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை, புகார்களின் விவரங்கள், புகார்தாரர்கள் அனுப்பிய புகைப்படங்கள், வீடியோக்கள் ஆகியவற்றையும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும், நடவடிக்கை மேற்கொள்ள எடுத்துக்கொண்ட நேரம், சீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறித்தும், புகார்தாரர் தெரிவித்த கருத்துக்கள் ஆகியவற்றைக் கணினியில் பார்வையிட்டும், கணினியில் சமூக வலைதளப் புகார்களை கையாளும் பணியாளர்களிடம் கலந்துரையாடியும் ஆய்வு மேற்கொண்டார்.

புகார்கள் குறித்துச் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த மாநகராட்சி அலுவலர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றும், அலுவலர்கள் புகாரை சரிசெய்ய எடுத்துக் கொண்ட காலஅளவு குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மழை அதிக அளவில் பெய்கின்றதா என்றும், வெவ்வேறு சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுகின்றதா என்றும் சுரங்கப்பாதைகளில் உள்ள கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து ஒவ்வொரு சுரங்கப்பாதையாகப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கட்டுப்பாட்டு அறையில் சுழற்சி முறையில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்தும், பணியாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும் விரிவாகக் கேட்டறிந்தார். ■

நவம்பர் 23: கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாள்

என்மொழி தமிழே... என்செயல் தமிழே...

என்மொழி தமிழே அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்
என்மொழி தமிழே அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்.

என்மனம் என்றன் எண்ணம்
என்செயல் தமிழே என்பேன்
என்குரல் என்றன் பாடல்
என்சுவை அதுவே என்பேன்.

சீரறிந்த நீதிகளில் நெஞ்சம் வைப்பேன்
சித்திரத்தில் அன்றாடம் விழிகள் வைப்பேன்
பாரறிந்த பைந்தமிழ் அழிக்க வேண்டிப்
படைவந்தே எதிர்த்தாலும் அஞ்ச மாட்டேன்.

நீச்சலடித் திடுதற்கே அச்சங் கொள்வோர்,
நீர்க்கடலி லாமுத்து எடுப்பர்? ஆட்டின்
மேய்ச்சலைப்போல் நுணிக்கல்விப் பயிற்சி பெற்றோர்
முத்தமிழை உணர்வாரோ? உணரார்!.....

- கவிஞர் சுரதா

நவீன வசதிகளுடன் புதிப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா திறப்பு-24.10.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் 24.10.2025 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் 42.45 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்புக் கோபுரம், பார்வையாளர் மாடம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

“உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கும் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” வழங்கப்படும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான விவாதத்தின்போது, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் அளித்த பதில் – 16.10.2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைப்’ பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி வைத்தார்கள். மகளிரின் பொருளாதார விடுதலைக்குத் துணை நிற்கின்ற இந்தத் திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 14 இலட்சம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 26 மாதங்களாக, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி, இந்த ஆண்டு வரை – இன்றைக்கு 16 ஆம் தேதி: ஏற்கனவே ஆயிரம் ரூபாய் கொடுத்தாகிவிட்டது. தமிழ்நாட்டு மகளிருக்கு, இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 இலட்சம் மகளிர் ஒவ்வொருவருக்கும் சுமார் 26 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசு கொடுத்துள்ளது. இதுவரை கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இத்திட்டத்தில், கூடுதலான மகளிர் பயனடைய வேண்டுமென்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விதிகளைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, அரசு மானியத்தில், 4 சக்கர வாகனம் வைத்திருக்கும் குடும்பங்கள், OAP பெறும் குடும்பங்கள் ஆகியவற்றில், விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிருக்கும் உரிமைத் தொகை சேர்த்து வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள்.

இந்தச் சூழலில், நம்முடைய அரசு, அரசு சேவைகள் மக்களைத் தேடி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை 19.06.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த முகாம்களில், கிராமப்புறங்களில் 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களில் 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த முகாம்கள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழும் மனுக்கள் ஏற்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக, நவம்பர் 15ஆம் தேதி வரை 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டது.

15.10.2025 வரை 9 ஆயிரத்து 55 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் மத்தியில், இந்த முகாம்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. இதுவரை, உரிமைத் தொகை வேண்டி 28 இலட்சம் மகளிர் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் விண்ணப்பங்களை அளித்துள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நவம்பர் 14, 2025 அன்று முடிவடைய உள்ளன. இதற்கிடையே, புதிதாக உரிமைத் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வருவாய்த்துறை மூலம் Field Inspection செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நவம்பர் 30, 2025-க்குள் முடிவடையும் என்று கூறிக்கொள்கிறேன்.

முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மகளிருக்கு வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்தச் செய்தியை இந்த மாமன்றத்தின் வாயிலாக உங்களோடு நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மகளிரின் பொருளாதார தன்னிறைவுக்கு என்றும் நம்முடைய திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்று கூறிக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

நவம்பர் 8: தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாள்

தமிழ் உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்...

நான் ஒன்றை மறந்தால் நான் மாத்திரமல்ல தமிழ் சமுதாயமே நன்றி கொன்ற ஒரு குற்றத்திற்கு ஆளாக நேரிடும். தமிழுக்குத் தமிழ்மொழிக்குத் தொண்டாற்றிய பெருமைக்குரியவர் வீரமாமுனிவர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற தொண்டு சாதாரணமானவைகள் அல்ல.

உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கிட்ட ஆணை இந்தக் கடற்கரை ஓரம் முழுவதும் தமிழுக்காகப் பாடுபட்டவர்கள், தமிழுக்காக வாழ்ந்தவர்கள், தமிழை வளர்த்தவர்கள், தமிழைப் பரப்பியவர்கள், தமிழைப் பொலிவுறச் செய்தவர்கள் அவர்களுடைய சிலைகளால் நிரப்ப வேண்டும் என்பது.

அப்படி நிரப்பப்பட்ட நேரத்திலே ஒரு சிலையாகச் "சதுரகராதி" தந்த வீரமாமுனிவர் அவர்கள். இவர் மதகுருவாகத்தான் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். தொடக்கத்திலே 1710 என்று எனக்கு நினைவு. அப்போது கோவாவிலே வந்து அவர் இறங்கினார். பின்னர் நெல்லை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் தங்கி கிறித்தவச் சமயத் தொண்டினை ஆற்றினார். அத்துடன் தமிழ் கற்று நூல் படைக்கும் திறனும் பெற்றார். தமிழ்த் துறவியைப் போல உடையிலும், நடையிலும், உணவிலும் ஒரு மாற்றத்தையே செய்துகொண்டார். முனிவர் வீரமாமுனிவராக ஏற்றம் பெற்றார். அவர் அகரம் முதல் லகரம் வரை தமிழ் மொழியிலே உள்ள சொற்களை எல்லாம் தொகுத்துச் "சதுரகராதி" என்ற நூலை உருவாக்கினார்.

தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல் வீரமாமுனிவர் அவர்களால் எழுதப்பட்டது. திருக்குறள் நூலின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியிலே மொழி பெயர்த்த பெருமை வீரமாமுனிவர் அவர்களுக்கு உண்டு, இப்படித் தமிழ்நாட்டிலே மதப் பிரச்சாரத்திற்காக என்று வந்து அந்த உணர்வுகளை மாத்திரம் மக்களிடத்திலே எழுப்பாமல் அதோடு தமிழ் உணர்வையும் ஊட்டிய பெருமைக்குரியவர் தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்கள்.

*— மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கிறித்துவ ஆய்வு மையம் தொடங்குவதற்கு நிதி வழங்கும் விழாவில் 14.07.1999 அன்று முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை*

தெரிந்து கொள்வோம்

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் இட ஒதுக்கீட்டினால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் சேர்க்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாது...

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 18 உறுப்புக் கல்லூரிகள், 28 இணைப்புக் கல்லூரிகள் (தனியார்) என மொத்தம் 46 வேளாண் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.
- இக்கல்லூரிகளில், 14 இளங்கலை வேளாண் பட்டப்படிப்பிற்கான 5,250 இடங்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்கள், அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் தரவரிசைப்படி சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர்கள் சேர்க்கைக்குப் பொது நுழைவுத் தேர்வு ஏதும் நடத்தப்படுவதில்லை.
- நடப்பாண்டில், அனுமதிக்கப்பட்ட 5,250 மாணவர் சேர்க்கை இடங்களில் இதுவரை 4,274 இடங்கள் நிரப்பப்பட்டு 12.09.2025 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
- இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 18 உறுப்புக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட 2,516 மாணவர் சேர்க்கை இடங்களில் 2,441 இடங்கள் (97 சதவீதம்) நிரப்பப்பட்டுள்ளன. இந்த மாணவர் சேர்க்கை அனைத்தும் மேல்நிலைப் பொதுத்தேர்வு மதிப்பெண் தரவரிசைப்படி மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள அனைத்து மாநில வேளாண் பல்கலைக்கழகங்களிலும் 20 சதவீதம் இளங்கலைப் பட்டப்படிப்பிற்கான இடங்கள் இனி பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (CUET) மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) நிரப்பும் என அறிக்கை வெளியிட்டிருக்கிறது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 18 உறுப்புக் கல்லூரிகளில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட சேர்க்கை இடங்களில் , 7.5 சதவீத அரசுப் பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீடு, 5 சதவீத மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீடு, 5 சதவீத தொழில்முறைக்கல்வி (vocational) & விளையாட்டு ஒதுக்கீடு, முன்னாள் இராணுவத்தினர் ஒதுக்கீடு நீங்கலாக மீதமுள்ள 1,361 இடங்களுக்கு 20 சதவீதம் என்ற அடிப்படையில் 272 மாணவர் சேர்க்கை இடங்கள் கூடுதலாக அகில இந்திய அளவில் நிரப்புவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்திற்கு (ICAR) ஒப்படைப்புச் செய்யப்பட்டுள்ளன.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) இந்த 20 சதவீத இட ஒதுக்கீட்டினால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஏற்கனவே மேல்நிலைப் பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் கடைப்பிடித்துவரும் மாணவர்களின் சேர்க்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. இந்த 20 சதவீத இடங்களுக்கும் தமிழ்நாடு மாணவர்களும் போட்டித்தேர்வு எழுதிச் சேர இயலும். மேலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திலும் இவ்வாறான ஒதுக்கீடு முறை நடைமுறையில் உள்ளது.
- ஒன்றிய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) 20 சதவீத ஒதுக்கீடுக்கு மட்டுமே அகில இந்திய அளவில் பொதுத்தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது என்றும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஆண்டுதோறும் மேல்நிலை பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் 5,250 இடங்களுக்கான மாணவர் சேர்க்கை தற்போது உள்ளபடி மதிப்பெண் தரவரிசையின்படியே நடைபெறும்.
- நடப்பாண்டில், இளங்கலை வேளாண் கல்வியில் மாணவர் சேர்க்கைக்கான உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டதுடன், 28 இணைப்புக் கல்லூரிகளில் (தனியார்) கல்விக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை நிர்ணயம் செய்திட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு. ஆர். பொங்கியப்பன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும், இணைப்புக் கல்லூரிகளில் (தனியார்) இளங்கலை

வேளாண் பட்டப் படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை கண்காணித்திட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு. என்.கிருபாகரன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டில் இளங்கலை வேளாண் கல்வியில் மாணவர் சேர்க்கையினை அதிகரித்திடவும், வேளாண் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதியும், அரசுப் பள்ளியில் பயின்று 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதி, உணவுக் கட்டணத்தில் முழுவிலக்கு வழங்கப்படுவதுடன், முதல் தலைமுறைப் பட்டதாரிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு உதவித்தொகையும், புதுமைப் பெண், தவப்புதல்வன் திட்டங்களில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகையும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் பிறந்தநாள்-01.10.2025

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.10.2025 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சென்னை, அடையாறு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.10.2025 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சென்னை, அடையாறு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டார்.

மக்கள் போற்றிய மகத்தானத் திட்டங்கள்

அன்று...

"சத்துணவில் வாழைப்பழம் வழங்கும் திட்டம்"

குழந்தைகளுக்கு வழங்குகின்ற உணவில் சத்து இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் முட்டை வழங்க வேண்டும் எனும் எண்ணத்தின் அடிப்படையில் முதலில் ஒரு முட்டை, பிறகு இரண்டு முட்டை, அடுத்தது மூன்று முட்டை என்கிற அளவிற்குப் பள்ளிக்கூடத்திலே சத்துணவில் பரிமாறப்பட்டது. இது தான் உண்மையான சத்துணவு என்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதே மகிழ்ச்சியோடு கல்வி கற்கின்ற வாய்ப்பு அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் கிடைத்தது. பின்பு சைவம் சாப்பிடும் பிள்ளைகள் முட்டை சாப்பிடுவதில்லை என்பதால் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்குச் "சத்துணவில் வாழைப்பழம் வழங்கும் திட்டம்" சென்னை, ஆயிரம் விளக்கில், 15.07.2008 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இன்று...

நகர்ப்புறப் பகுதிகளில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்"

பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும், தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 3.06 இலட்சம் மாணவ, மாணவியர்கள் தினசரி பயன்பெறும் வகையில் நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால், 26.08.2025 அன்று சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது.

குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு அன்புக் கரங்கள் திட்டம் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் நன்றிக் கடன்பட்டுள்ளோம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துப் பொதுமக்களைப் பயன்பெறச் செய்து வருகிறார்கள். அவ்வாறாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தற்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "அன்புக் கரங்கள்" திட்டமானது, கடந்த 15.09.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, தமிழ்நாடு முழுவதும் 6,052 பெற்றோர்களை இழந்த குழந்தைகள் / பெற்றோர்களில் ஒருவரை இழந்த குழந்தைகள் ஆகியோர்களுக்கு 18 வயது வரையில் மாதம் ரூபாய் 2,000/- அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தும் வகையில், இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில், தங்கள் பெற்றோரையும் இழந்து, உறவினர்களின் பாதுகாப்பில் குழந்தைகள் வளர்ந்து வருவதை அறிந்து, அக்குழந்தைகளை அரவணைத்துத் தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அவர்களது பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி, அவர்கள் கல்வியைத் தொடர, 18 வயது வரை மாதம் ரூபாய் 2,000/- உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப் படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி, உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் "அன்புக் கரங்கள்" திட்டத்தின்கீழ் 144 குழந்தைகளுக்கு மாதம் ரூபாய் 2,000/- அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, அதற்கான அடையாள அட்டைகளும் அக்குழந்தைகளின் உறவினர்கள் / பாதுகாவலர்கள் வழங்கும் நிகழ்வு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சரின் அன்புக்கரங்கள் திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவலர் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், வடக்கு சந்தணூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மாரியம்மாள் அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

என் பெயர் மாரியம்மாள், நான் இளையான்குடி வட்டம், வடக்குச் சந்தணூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் எனது மகள், மருமகன் விபத்தில் இறந்துவிட்டனர்.

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அக்குழந்தைகளான எனது பேரன், பேத்தியை, தாய்வழிப் பாட்டியான நான் வளர்த்து வருகிறேன். அக்குழந்தைகளைப் படிக்க வைப்பதில் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அன்புக்கரங்கள் திட்டம் மூலம் எனது பேரன் பேத்திக்கு மாதம் ரூ.2,000/- வழங்குவது எனக்கு மிகவும் பேருதவியாக உள்ளது. அவர்களின் 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2,000/- இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

திருமதி மாரியம்மாள்

பெற்றோரை இழந்த எனது பேரன் பேத்திக்கும், அவர்களைப் பராமரித்து வரும் எனக்கும், மாதந்தோறும் பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளார்கள். குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு, இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவலர் திருப்புவனம் வட்டம் நயினார்பேட்டைக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ரேவதி அவர்கள் நம்மிடம் தெரிவிக்கையில்,

என் பெயர் ரேவதி. நான் திருப்புவனம் வட்டம், நயினார் பேட்டை கிராமத்தைச் சேர்ந்தவர்.

கடந்த 6 மாதங்களுக்கு முன் எனது கணவரின் தம்பி, தம்பியின் மனைவி ஆகிய இருவரும் குடும்பப் பிரச்சினையின் காரணமாக இறந்து விட்டனர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். எனக்கும் 2 குழந்தைகள் உள்ளன.

தற்போது எனது கணவரின் தம்பி குழந்தைகளாகிய மூன்று குழந்தைகளையும் எங்களது அரவணைப்பில் பாதுகாத்து வருகிறோம். எனது இரண்டு குழந்தைகளையும் சேர்த்து மொத்தம் ஐந்து குழந்தைகளையும் படிக்க வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தோம். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்புக் கரங்கள் திட்டத்தின் மூலம் எனது கணவரின் தம்பிக் குழந்தைகளான அம்மூன்று குழந்தைகளுக்கும் மாதந்தோறும் ரூ.2,000/- வழங்குவது எங்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

குழந்தைகளின் கல்வியானது, எக்காரணத்தைக் கொண்டும் தடையாகக் கூடாது என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இதுபோன்ற



திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். 18 வயது வரை மாதம் ரூ.2,000/- உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை ஏற்படுத்தியுள்ளார்கள். பெற்றோர்களை இழந்த அக்குழந்தைகளுக்கு, பெற்றோர்களின் நிலையிலிருந்து அனைத்தையும் செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.



கிராமப் பகுதிகளில் உள்ள இல்லங்களுக்கு இணைய, OTT சேவைகள் விரைவில்...

- 11,800-க்கும் மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்துகள் கண்ணாடி இழைக் கம்பி வடம் (OFC) வழியாக இணைக்கப்பட்டுள்ளன.
- கிராமச் சபைக் கூட்டத்தின்போது, அமைக்கப்பட்டுள்ள OFC உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.10.2025 அன்று கிராம சபைக் கூட்டத்தின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள பிரதிநிதிகளுடன் நேரடிக் காணொலி உரையாடல் நடத்தினார்கள்.
- இது மாநிலம் முழுவதும் உள்ள 10,000 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் மாற்றங்கள்:

- தொடக்கத்தில், கிராமப் பஞ்சாயத்து வாரியாகச் சேவை வழங்குநர்களைத் (Franchisee Partners) தேர்ந்தெடுப்பதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டது. கிராமப் பஞ்சாயத்து வாரியான அறிவிப்பிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து குறைந்த அளவிலான ஆர்வமே வெளிப்பட்டது.
- கிராமப் பஞ்சாயத்து வாரியாகச் செயல்பட்டால் வருவாய் குறைவு, வீட்டு இணைப்புகளுக்கும், நெட்வொர்க் பராமரிப்புக்கும் போதுமான வருவாய் ஈட்டுவது சவாலாக இருக்கும். ONT (Optical Network Terminal) நிறுவுவதற்கான செலவைப் பொதுமக்களிடம் இருந்து வசூலிக்க வேண்டிய சூழல் இருந்தது.
- மேற்கண்ட குறைகளைச் சரிசெய்து, தற்போது மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த மேலாண்மைக் கட்டமைப்பை உருவாக்குவதே இலக்காகும். கிராமப் பஞ்சாயத்து வாரியாகத் தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக மாவட்ட வாரியாகத் தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- பொதுமக்களிடம் அதிகக் கட்டணம் வசூலிக்காமல், குறைந்த செலவில் ONT கருவிகளை நிறுவி, தரமான இணைய சேவையை வழங்குவது உறுதி செய்யப்படும். மக்கள் பெரிய அளவில் முதலீடு செய்யாமல் தரமான இணையச் சேவையைப் பெறுவதே இதன் நோக்கம்.
- விரைவில் கிராமப் பகுதிகளில் உள்ள இல்லங்களுக்கு இணையம், OTT சேவைகளை ஏற்படுத்தித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலைக் கிராம உண்டு உறைவிடப் பள்ளி மாணவ, மாணவியர்கள் தொடர்ந்து கல்வி கற்க புதிய வாகன வசதிகள் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதோடு நன்றி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலைக் கிராம மாணவ, மாணவியர்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் கொங்காடை, ஆசனூர், பர்கூர், தலமலை மலைக் கிராம ஆரம்பப் பள்ளிகளுக்கு 06.10.2025 அன்று 4 புதிய வாகனங்களை வழங்கி அதன் சேவையினைத் துவக்கி வைத்தார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், மலைக் கிராமங்களை உள்ளடக்கிய 6 மாவட்டங்களில் உள்ள 26 உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு புதிய வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்கள் பயன்பாட்டுக்கு வழங்கியுள்ளார்.

இதில் தலமலை வனச்சரகம் காளிதிம்பம், மாவநத்தம், ராமரணை, கோடிபுரம், தொட்டபுரம் ஆகிய வனக் கிராமங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகளைப் புதிய வாகனம் மூலம் உண்டு உறைவிடப்பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பணி 09.10.2025 அன்று தொடங்கியது. காளிதிம்பத்தில் புதிய வாகனத்தை பார்த்த குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடனும், குதூகலத்துடனும் வரவேற்றனர். பள்ளிக்குச் செல்லாமல் வீட்டில் இருந்த 6 குழந்தைகள் ஆர்வத்துடன் புதிய வாகனத்தில் ஏறி பள்ளிக்குச் சென்றனர். சத்தியமங்கலம், காளிதிம்பம் உள்ளிட்ட 6 மலைக் கிராமங்களில் இருந்து பழங்குடியினப் பள்ளி மாணவர்கள் புதிய வாகனம் மூலம் தலமலை அரசுத் தொடக்கப் பள்ளிக்குப் பயணித்தனர். போக்குவரத்து வசதியில்லாத இக்கிராமங்களில் இருந்து பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால் 2 கி.மீ. தொலைவு நடந்து சென்று பின்னர் பிரதானச் சாலையினை வந்தடைந்து அரசுப் பேருந்தில் ஏறி செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது.

அதே போன்று அந்தியூர் மலைக் கிராமங்களான கொங்காடை, பர்கூர் மலைக் கிராம மாணவ, மாணவியர்களும் வாகனத்தின் மூலம் பள்ளிக்குப் பயணித்தனர். இதில், வெள்ளியங்கிரி என்ற மாணவன் 5-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்த நிலையில் 6-ஆம் வகுப்புக்குப் பள்ளிச் செல்ல தொலைவு அதிகமாக இருந்த காரணத்தால் பள்ளி இடைநிற்றல் சூழல் ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது வாகனச் சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளதால் ஆர்வத்துடன் பள்ளிக்குச் சென்றான்.

மேலும், தற்போது விலங்குகள் அச்சுறுத்தல் இல்லாத பாதுகாப்பான பயணம் என்பதால் பெற்றோர்கள் குழந்தைகளை விரும்பி அனுப்புவதால் இடைநிற்றல் குறையும். மாவநத்தம், ராமரணை, கோடிபுரம். தொட்டாபுரம் வனக் கிராமங்களில் இருந்தும் குழந்தைகளை வேன் மூலம் அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அனைத்து மலைக் கிராமங்களிலும் 100 சதவிகித கல்வி வளர்ச்சி பெறுவதற்கு இத்திட்டம் உதவியாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பயன் பெற்ற ஈரோடு மாவட்டம், அந்தியூர் மலைக் கிராமமான பர்கூர், மூளையூர் மலைக் கிராம பயனாளிகள் மாணவி லோகேஸ்வரி, மாணவன் தக்சித் ஆகியோர்களின் பெற்றோர்களான திருமதி கெம்பே, க.பெ.பாலன் அவர்கள் மன நிறைவோடு நம்மிடம் தெரிவித்ததாவது,

திருமதி கெம்பே

மாணவி லோகேஸ்வரி

எனது மகள் 4-ஆம் வகுப்பும், எனது மகன் ஒன்றாம் வகுப்பும் பர்கூர் பள்ளியில் பயின்று வருகிறார்கள். எங்கள் கிராமத்திலிருந்து அடர்ந்த காடுகள் வழியாகப் பள்ளிக்குச் சென்று வர 2 கி.மீ. வரை நடந்தே செல்ல வேண்டியிருக்கும். இந்நிலையில் தொடர்மழை, காட்டுப் பன்றி, யானை, காட்டு எருமை போன்ற வன விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் காரணத்தால் குழந்தைகளைத் தனியாக அனுப்ப இயலாமல் பாதுகாவலர் மூலமாகவே பள்ளிக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையிருந்தது.

தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சரான தாயுமானவர் அவர்கள் எங்களைப் போன்ற மலைக் கிராமத்தில் வசிக்கும் ஏழைகளின் குழந்தைகளும் எந்த வித இடையூறுமின்றித் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் எங்கள் பகுதிக்கு வாகனங்களை வழங்கியிருக்கிறார்கள். இந்த வாகனங்கள் மூலம் எங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாகவும் மனநிறைவோடும் பள்ளிக்கு அனுப்பி வைக்க முடிகிறது. இதனால், எங்கள் சிரமங்கள் பெருமளவில் குறைந்திருப்பதோடு பள்ளிக்கு இடைநிற்றல் வெகுவாகக் குறையும். இத்தகைய திட்டத்தைத் தாய் உள்ளத்தோடு எங்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மலைக் கிராம மக்கள், மாணவ / மாணவியர்களின் பெற்றோர்களின் சார்பிலும் நிறைந்த மனதோடு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

தெரிந்துகொள்வோம்

அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் 96 சதவிகிதம் மாணவர்கள் தேர்ச்சிபெற்றுச் சாதனை...

❖ தமிழ்நாட்டில் 132 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 311 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இதில் வருடந்தோறும் 50,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர். இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான தொழில் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து அகில இந்திய அளவில் ஒரே தேர்வாக நடத்தப்படுகிறது.

❖ இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27,480 அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும், 19,280 தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும் ஆக மொத்தம் 46,760 மாணவ, மாணவியர் பங்கேற்றனர். அதில் 26,447 (96.24%) அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும், 16,621 (86.21%) தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியரும் ஆக மொத்தம் 43,068 (92.10%) மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 96% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

❖ அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டதால், இந்த ஆண்டில் 40 மாணவ, மாணவியர் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

பயிற்சி வினா - விடைத்தாள்

1. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கல்விச் செலவுகளை ஈடுசெய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் பெண் குழந்தைக்கு வைப்புத் தொகையின் 6ஆவது ஆண்டு முதல் வழங்கப்படும் வருடாந்திர ஊக்கத்தொகையின் மதிப்பு

(A) ரூ.1,000/- (B) ரூ.1,200/-

(C) ரூ.1,800/- (D) ரூ.2,000/-

2. அரசின் எந்த வீட்டு வசதி திட்டமானது வீடற்ற மக்களுக்கு மட்டுமல்லாது நகர ஏழைகள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், நடுத்தர வர்க்க மக்களுக்கும் ஒரு வீட்டை உறுதி செய்கிறது?

(A) MUDF (B) TNUDP

(C) JNNURM (D) PMAY(U)

3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு உதவி எந்த வகைப் பெண்களுக்கு வழங்கப்பட்டது?

(A) ஏழைப் பெண்கள் திருமண உதவித் தொகை

(B) பெண்களுக்கான ஊட்டச்சத்துக் குறைபாட்டை நீக்க

(C) விதவை மறுமணம் உதவித்தொகை

(D) ஆதரவற்ற பெண்கள் திருமணத் தொகை

4. கோவிட் 19-ற்குப் பிறகு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையான விலையில் -------- சதவிகிதம் உயர்ந்துள்ளது.

(A) 11% (B) 8% (C) 6% (D) 5%

5. பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(1) குழந்தைகள் உதவி எண் – 1098

(2) பெண்கள் உதவி எண் – 1090

(3) சைபர் கிரைம் உதவி எண் – 1940

(4) கடலோரப் பாதுகாப்பு உதவி எண் – 1093

(A) (1) மற்றும் (2) (B) (2) மற்றும் (3)

(C) (3) மற்றும் (4) (D) (1) மற்றும் (4)

6. தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தின் குறிக்கோள்

(A) உணவுப் பாதுகாப்பு (B) சம விநியோகம்

(C) சமூகப் பாதுகாப்பு (D) பொருளாதாரப் பாதுகாப்பு

7. வாக்கியங்களை வாசிக்க:

(I) கனவு இல்லத் திட்டம் தமிழ் ஆய்வாளர்களுக்கு

(II) அவரவர் மாவட்டங்களில் அவர்களின் விருப்பப்படி 15 சென்ட் நிலங்கள் வழங்கப்படும்.

(III) தமிழ்நாட்டில், தமிழ் எழுத்தாளர்கள் இத்திட்டம் மூலம் பயனடைகின்றனர்.

(IV) தமிழ் எழுத்தாளர்களுக்கு ஐந்து செண்ட் நிலம் வழங்கப்படும்.

(A) (I), (IV) மட்டும் (B) (II), (III) மட்டும்

(C) (III), (IV) மட்டும் (D) (I), (III) மட்டும்

8. பின்வரும் சீர்திருத்தவாதிகளை அவர்களின் வாழ்நாளுடன் பொருத்துக:

(a) ராஜா ராம் மோகன் ராய்	1. 1858-1962
(b) ஜோதீபா பூலே	2. 1842-1901
(c) எம்.ஜி. ரனடே	3. 1828-1890
(d) டி.கே. கார்வே	4. 1772-1833

	(a)	(b)	(c)	(d)
(A)	1	2	3	4
(B)	1	2	4	3
(C)	4	3	2	1
(D)	1	3	2	4

9. மனித வளர்ச்சிக் குறியீட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படாத சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) ஆயுள் எதிர்பார்ப்பு (B) கல்வி

(C) தனிநபர் வருமானம் (D) பிறப்பு வீதம்

10. கீழ்க்காணும் தமிழக மாவட்டங்களைக் கருத்தில் கொள்க:

(1) கன்னியாகுமரி (2) வேலூர் (3) அரியலூர் (4) கோயம்புத்தூர் (5) தூத்துக்குடி

குழந்தை வளர்ச்சிக் குறியீட்டில் முன்னிலையில் உள்ள முதல் மூன்று மாவட்டங்களைத் தெரிவு செய்க

(A) (1), (2) மற்றும் (3) மட்டும் (B) (2), (4) மற்றும் (5) மட்டும்

(C) (1), (3) மற்றும் (4) மட்டும் D) (1), (4) மற்றும் (5) மட்டும்

11. P, Q, R, S, T மற்றும் U ஆகியோர் ஒரு குடும்பத்தின் 6 உறுப்பினர்கள். அவர்களில் இரண்டு திருமணமான தம்பதியர் உள்ளனர். T என்பவர் ஒரு ஆசிரியர் மற்றும் அவர் R மற்றும் U-ன் தாயாரான மருத்துவரை மணந்து கொண்டுள்ளார். Q என்பவர் ஒரு சட்ட வல்லுநர், மேலும் அவர் Pஐ மணந்து கொண்டுள்ளார். P என்பவருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு பேரன் உள்ளனர். இரு திருமணமான பெண்களில் ஒருவர் வீட்டில் இருப்பவர் மற்றும் அந்தக் குடும்பத்தில் ஒரு ஆண் பொறியாளர் மற்றும் ஒரு மாணவர் உள்ளனர். எனில், கீழ்க்கண்டவர்களில் யார் வீட்டில் இருக்கும் பெண்?

(A) P (B) Q (C) S (D) T

12. A = Z = 1, B = Y = 2, C = X = 3, ... etc எனில் எது தவறானது?

(A) M = N (B) M + N = L + O + A + Z

(C) A + B + C = X + Y + Z (D) E, G, J என்பவை பகா எண்கள்

13. A என்பவர் B என்பவரை விட 20% குறைவாக வேலை பார்க்கிறார். ஒரு வேலையை A 7 ½ மணி நேரத்தில் முடிப்பாரானால் B எவ்வளவு நேரம் எடுப்பார்?

(A) 6 மணி நேரம் (B) 5 ½ மணி நேரம்

(C) 6 ½ மணி நேரம் (D) 6 ¾ மணி நேரம்

14. ஒரு வேலையை 4 ஆண்கள் 3 நாட்களில் முடிப்பர் மற்றும் அதே வேலையை 3 பெண்கள் 6 நாட்களில் முடிப்பர் எனில் பின்வருவனவற்றுள் தவறானது எது?

(A) 8 ஆண்கள் மற்றும் 6 பெண்கள் ஒரே நாளில் வேலையை முடிப்பர்

(B) 6 ஆண்கள் மற்றும் 8 பெண்கள் ஒரே நாளில் வேலையை முடிப்பர்

(C) 12 ஆண்கள் அந்த வேலையை ஒரே நாளில் முடிப்பர்

(D) 18 பெண்கள் அந்த வேலையை ஒரே நாளில் முடிப்பர்

15. வட்டத்தின் ஆரம் 1 செ.மீ அதிகரிக்கும்போது வட்டத்தின் பரப்பு 66 சதுர செ.மீ. அதிகரிக்கிறது. புதிய வட்டத்தின் பரப்புக் காண்க.

(A) $\frac{2}{7} \times 10^3$ (B) $\frac{2}{7} \times 9^3$

(C) $\frac{2}{7} \times 11^3$ (D) $\frac{2}{7} \times 12^3$

16. ஒரு நகரத்தில் மக்கள் தொகை ஆண்டுக்கு 6% அதிகரிக்கிறது. 2018 ஆம் ஆண்டு மக்கள் தொகை 2,38,765 ஆக இருந்தது. 2020ஆம் ஆண்டின் மக்கள் தொகையைக் காண்க.

(A) 2,86,726 (B) 2,68,276

(C) 2,12,500 (D) 2,86,722

17. 5 ஆண்டுகளில் அசல் ரூ.20,000 மேல் கிடைக்கும் தனி வட்டியானது அசல் ரூ. 15,000 மேல் கிடைக்கும் தனி வட்டியை விட ரூ.3,000 அதிகம் எனில் ஆண்டு வட்டி வீதம் காண்க.

(A) 9.8% (B) 10% (C) 12% (D) 12.5%

18. $\frac{6x+2y}{3x+4y} = \frac{3}{4}$ மற்றும் $\frac{x+z}{2x+3z} = \frac{3}{7}$ எனில் x:y: z ஐ காண்க.

(A) 4 : 15 : 4 (B) 4 : 15 : 2

(C) 3 : 4 : 7 (D) 4 : 13 : 2

19. மூன்று எண்களின் மீ.சி.ம. ஆனது 120 எனில் கொடுக்கப்பட்ட எண்ணில் எது மீ.பொ.வ ஆக இருக்க இயலாது?

(A) 8 (B) 12 (C) 24 (D) 35

20. $a = 2^2 \times 3^3$

$b = 3^2 \times 5^3$

$c = 5^2 \times 2^3$ எனில் மீ.பொ.வ. (a^2, b^3) + மீ.பொ.வ (b^2, c^3) + மீ.பொ.வ. (c^2, a^3) இன் மதிப்புக் காண்க

(A) $3^6 + 2^6 + 5^6$ (B) $3^9 + 2^9 + 5^9$

(C) $2^3 + 3^6 + 5^9$ (D) $5^3 + 3^6 + 2^9$

21. ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒரு நகரத்தின் மக்கள் தொகை 5% அதிகரிக்கிறது. மேலும், அதற்கு அடுத்த வருடத்தில் மக்கள் தொகை 5% குறைகிறது. இரண்டாவது ஆண்டின் முடிவில் மொத்த மக்கள் தொகை 9,975 எனில் முதலாம் ஆண்டின் தொடக்கத்தில் மக்கள் தொகை எவ்வளவு?

(A) 9,500 (B) 10,500

(C) 9,975 (D) 10,000

22. $5\frac{3}{4}$, $4\frac{4}{5}$ மற்றும் $7\frac{3}{8}$ இவற்றின் கூடுதலுடன் எந்தப் பின்னத்தைக் கூட்ட அது ஒரு முழு எண்ணாகும்?

(A) $\frac{1}{40}$ (B) $\frac{2}{40}$

(C) $\frac{3}{40}$ (D) $\frac{4}{40}$

23. கக்குவான் இருமலை உருவாக்கும் நோய்க் கிருமி

(A) பார்டிடெல்லா பொட்டுஸிஸ் (B) டிப்தீரியா ஆண்டிடாக்சின்

(C) ஸ்டெப்டோகாக்கல் நிம்மோனியா (D) சால்மோனெல்லா பாராடைபி

24. பொருள் உணராமல் கற்றலில் முக்கிய நடைமுறையாக இருப்பது -------- கற்றல் ஆகும்.

(A) பாடத்தை ஆழமாக (B) கருத்துகளை

(C) மீண்டும் (D) உயர் ஒழுங்கு சிந்தனை

25. குறைந்த ஒளிச் செறிவில் சிறப்பாகச் செயல்படும் தாவரங்களை இவ்வாறு அழைக்கலாம்.

(A) ஹீலியோபைட்டுகள் (B) ஹாலோபைட்டுகள்

(C) சியோபைட்டுகள் (D) ஸ்போரோபைட்டுகள்

விடைகள்

1.–(C)	2.–(D)	3.–(C)	4.–(B)	5.–(B)
6.–(A)	7.–(C)	8.–(C)	9.–(D)	10.–(D)
11.–(A)	12.–(D)	13.–(A)	14.–(B)	15.–(C)
16.–(B)	17.–(C)	18.–(B)	19.–(D)	20.–(A)
21.–(D)	22.–(C)	23.–(A)	24.–(C)	25.–(C)

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்குச் சிறப்புப் பரிசு, புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

உலகத்திற்கே முன்னோடியான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்" விரிவாக்கம் மூலம் நகர்புற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பெறும் நன்மைகள் குறித்து விளக்கவும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

தமிழ்நாட்டு மக்களின் நீண்டகால ஆரோக்கியம், நலன் மேம்படுவதற்கான முழுமையான தீர்வாக விளங்கும் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் குறித்து

தமிழரசு இதழுக்கு திரு. பி.மணிவண்ணன் அவர்கள் அளித்த சிறப்புக் கட்டுரை...

கடந்த செப்டம்பர் மாத இதழில் கேட்கப்பட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.08.2025 அன்று தொடங்கி வைத்த "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தில் சிறப்பு மருத்துவ முகாம் வாயிலாகப் பயன்பெற்றது குறித்து விவரிக்கவும் என்ற தலைப்பிற்கு திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த **திரு. பி.மணிவண்ணன் B.Sc., M.A.,** அவர்கள் அனுப்பிய கட்டுரை.

தமிழ்நாடு மக்களிடம் மருத்துவச் சேவையைக் கொண்டு செல்லும் திட்டம்

தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம், உயர்தர மருத்துவச் சேவைகளை நேரடியாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கியமான சுகாதார முயற்சியாகும். இந்தத் திட்டத்தின்கீழ், கிராமப்புறங்கள், குடிசைப்பகுதிகள், பழங்குடியினர் பகுதிகளில் 1,256 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இங்கு மருத்துவ வசதிகள் எளிதாகக் கிடைக்காததால், இந்த முன்முயற்சி ஏற்கனவே மாநிலம் முழுவதும் 4.44 இலட்சம் மக்களுக்குப் பயனளித்துள்ளது.

இம்முகாம்கள் பெரும்பாலும் உள்ளூர்ப் பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்படுவதால், மக்கள் நகரம் செல்ல வேண்டிய தேவையின்றி, பயணச் செலவு, வேலை நேர இழப்பு போன்ற தடைகள் நீக்கப்படுகின்றன. இதனால் அனைவரும் எளிதாக மருத்துவ சேவையைப் பெற முடிகிறது. உதாரணமாக, ஈரோடு மாவட்டத்தில் 9,453 பேர், சேலம் மாவட்டத்தில் 9,500-க்கும் மேற்பட்டோர் இம்முகாம்களில் கலந்து கொண்டுள்ளனர்.

ஆரம்ப நிலை கண்டறிதல், முழுமையான சிகிச்சை மீது கவனம்

இந்தத் திட்டத்தின் முக்கியச் சிறப்பு, ஆரம்பத்திலேயே நோய்களைக் கண்டறிவது என்பதாகும். தமிழ்நாட்டில் தொற்றாத நோய்கள் (Non-Communicable Diseases - NCDs) காரணமாக மொத்த மரணங்களில் 75% ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வுகளின்படி, மாநிலத்தில் உயர் இரத்த அழுத்தம் (Hypertension) உள்ளோர் 33.9% மற்றும் நீரிழிவு (Diabetes) நோயாளிகள் 17.6% ஆக உள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் நடத்தப்படும் முகாம்களில் இலவச பரிசோதனைகள், பல்வேறு மருத்துவச் சோதனைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் மட்டும் 7,427 இரத்த பரிசோதனைகள், 5,703 இதய மின்கடிகாரம் (ECG), 1,143 இதய ஒலியலைப் (Echo) பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முகாமிலும் 17 மருத்துவத் துறைகளிலிருந்து நிபுணர்கள் பங்கேற்கின்றனர். இதன் மூலம், இதய நோய், நரம்பியல், மகப்பேறு உள்ளிட்ட துறைகளில் சிறப்பு ஆலோசனைகள், நகரம் செல்லாமல் மக்கள் பெற முடிகிறது. குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணிப்

பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் போன்ற பாதிப்படைந்த குழுக்கள் முக்கிய முன்னுரிமையாகக் கருதப்படுகின்றனர்.

மருத்துவச் சிகிச்சையைத் தாண்டிய முழுமையான ஆதரவு

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் வெறும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு மட்டும் அல்ல; இது முழுமையான நலத் திட்டமாகும். இதன் முக்கிய அம்சமாக, முகாம்களில் முதல்வரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) பதிவு உடனடியாகச் செய்யப்படுகிறது. இது கடுமையான நோய்களுக்கு நிதிப் பாதுகாப்பு வழங்குகிறது. உதாரணமாக, திருச்சியில் 110 பேர் இம்முகாம்களில் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் அரசின் பிற நலன்களைப்பெறத் தேவையான மாற்றுத்திறன் சான்றிதழ் இங்கு வழங்கப்படுகிறது. திருச்சி முகாம்களில் மட்டும் 85 பேர் தங்களது சான்றிதழைப் பெற்றனர்.

அத்துடன், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட மருத்துவ வரலாறு அறிக்கை (Medical History Report) வழங்கப்படுகிறது. இதில் அவர்களின் அனைத்துப் பரிசோதனை முடிவுகளும் இடம்பெறும், இது எதிர்கால மருத்துவ ஆலோசனைகளுக்கு உதவுகிறது.

மருத்துவச் சேவை, நிதிப் பாதுகாப்பு, சமூக நல ஆதரவுகளை ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம், 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் தமிழ்நாடு மக்களின் நீண்டகால ஆரோக்கியம் மற்றும் நலன் மேம்படுவதற்கான முழுமையானத் தீர்வாக விளங்குகிறது. ■

மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு மலர்தூவி மரியாதை-24.10.2025

படமும் / செய்தியும்

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் 24.10.2025 அன்று, தமிழ்நாடு அரசின் சார்பில், மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

என் பள்ளி! என் பெருமை!!

போட்டிகள்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்

தேர்வு செய்யப்பட்ட படைப்புகளை காண QR Code-யை Scan செய்யவும்.

(16-10-2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் நடத்தப்பட்ட "என் பள்ளி! என் பெருமை!!" போட்டிகளில் வெற்றிபெற்ற 70 பேருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்தநாள் முன்னிட்டு என் பள்ளி! என் பெருமை!!
என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு
பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கும் நிகழ்வு.

அதில்

- என் பள்ளி என் பார்வையில் போட்டியில் 1498 நபர்களும்,
- நான் தான் என் பள்ளி பேச்சாளர் போட்டியில் 654 நபர்களும்,
- நான் ஓவியன் போட்டியில் 1613 நபர்களும்,
- என் கதை என் எழுத்தில் போட்டியில் 1362 நபர்களும்,
- என் அன்பான ஆசிரியை / ஆசான் போட்டியில் 803 நபர்களும்,
- என் பள்ளி என் நினைவுகள் போட்டியில் 845 நபர்களும்,
- பள்ளிக்கூடம் வந்தேனே! போட்டியில் 643 நபர்களும்,
- என் அன்பான ஆசிரியை / ஆசான் போட்டியில் 745 நபர்களும்,
- கல்விக்கான தமிழ்நாடு அரசின் திட்டம் போட்டியில் 435 நபர்களும்,
- என் முன்னெடுப்புகள் – ரீல்ஸ் போட்டியில் 654 நபர்கள்
- என இந்த 10 பிரிவுகளில் 9252 நபர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் 70 நபர்கள் வெற்றி பெற்றவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

ஓவியம் / வரைதல் போட்டி

DIPR | வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
tndipnews | tndipr | tndipr | TN DIPR | www.dipr.tn.gov.in | TNDIPR, Govt. of Tamil Nadu